தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (தேபோஆ)

முகவரி

241, பூங்கா வீதி,

கொழும்பு 05

இணையத்தளம்

www.ntc.gov.lk

மின் அஞ்சல்

info@ntc.gov.lk

துரித அழைப்பு

1955

NTC/PL/AnnRep / 2022 2023.03.20

கௌரவ போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர்,

போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு,

7ஆவது மாடி,

செத்சிறிபாய கட்டம் 11

பத்தரமுல்லை.

ஆண்டறிக்கை – 2022

1971இன் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 (1) பிரிவின் மற்றும் அரசாங்கத் தொழில் முயற்சிகளுக்கான வழிகாட்டல்களின் பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31ஆந் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை, வருடாந்த கணக்குகள் அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை ஆகியவற்றை மிகவும் மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன்.


சஷி வெல்கம,

தலைவர்,

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

உள்ளடக்கம்

	அத்தியாயம்	பக்கம்
1.	**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு**	**04**
1.01	அறிமுகம்	05
1.02	எமது நோக்கு மற்றும் பணி	06
1.03	எமது இலக்கு	06
1.04	எமது நோக்கங்கள்	07
1.05	எமது பெறுமானங்கள்	08
1.06	தலைவரின் செய்தி	09
1.07	ஆணைக்குழுவின் அங்கத்தவர் குழு	11
1.08	தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் சிரேஷ்ட முகாமைத்துவக்குழு	13
1.09	ஆணைக்குழுவின் கட்டமைப்பு	14
2.	**2022 ஆம் ஆண்டின் செயலாற்றுகை**	**17**
2.01	சமூக நலனை முதன்மைப்படுத்திய பேருந்துச் சேவைகளை வழங்குதல்	19
2.02	பேருந்துத் தரிப்பிடங்களைப் பராமரித்தல் மற்றும் பேருந்து நிலையங்களை முறைப்படுத்தல்	25
2.03	பேருந்து ஊழியர் குழுவினரை பதிவுசெய்தல் மற்றும் பயிற்சி அளித்தல்	26
2.04	போக்குவரத்துக் கேள்வி மற்றும் சேவைத் தர ஆய்வு	27
2.05	தூரப் பயண சேவை நிறுத்துமிட சமிக்ஞைப் பலகைகளைப் பொருத்துதல்	29
2.06	இபோச மற்றும் தனியார் பேருந்துகளுக்கான ஒன்றிணைந்த நேர அட்டவணைகளைத் தயாரித்தல்	30
2.07	பேருந்துக் கட்டணங்களைத் தயாரித்தல் மற்றும் முரண்பாடுகளைத் தீர்த்தல்	31
2.08	பொதுப் போக்குவரத்து தொடர்புடைய தரப்பினருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்	32
2.09	பொதுப் போக்குவரத்து பேருந்துத் துறைக்கான நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல்	33
2.10	பேருந்துகளில் ஜீ.பீ.எஸ். (GPS) உபகரணங்களைப் பொருத்துதல்	36
2.11	முன்செலுத்தப்பட்ட அட்டை முறை (Electronic Fare Collection)	37
2.12	தேசிய போக்குவரத்து புள்ளவிபர அறிக்கையினைத் தயாரித்தல்	38
2.13	நகரப் போக்குவத்துத் திட்டமிடல்	39
2.14	நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் நவீனமயப்படுத்தல்	40
3.	**செயற்றிட்டங்களல்லாத பணிகள்**	41
	வருடாந்த கணக்குகள	48
	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	65



01.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

1.01 அறிமுகம்

பேருந்துகள் மூலம் பயணிகள் போக்குவரத்திற்கான தேசிய கொள்கை குறித்து அரசிற்கு அறிவுரை வழங்குதல் மற்றும் அக்கொள்கையினை நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றிற்காக 1991 இல 37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நிறுவப்பட்டது.

உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்களையும் அதாவது, அமைச்சரினால் நியமிக்கப்படும் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஒருவரின் பதவிக்குக் குறையாத பதவியை உடைய, அமைச்சரின் அமைச்சிலுள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரையும், கொள்கைத் திட்டமிடல் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரை ஆலோசித்து அமைச்சரினால் நியமிக்கப்படும் பணிப்பாளர் ஒருவரின் பதவிக்குக் குறையாத பதவியை உடைய, கொள்கைத் திட்டமிடல் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சிலுள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரையும், நிதி விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரை ஆலோசித்து அமைச்சரினால் நியமிக்கப்படும் பணிப்பாளர் ஒருவரின் பதவிக்குக் குறையாத பதவியை உடைய, நிதி விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சிலுள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரையும், அமைச்சரவையின் அனுமதியின் கீழ் கௌரவ போக்குவரத்து அமைச்சரினால் நியமிக்கப்படும் மேலும் உறுப்பினர்கள் ஐவரையும் கொண்ட ஆணைக்குழு அதற்கு வழங்கப்பட்டுள்ள பெயரின் மூலம் நிறைவான நிலைப்பாட்டினையும் பொதுவான முத்திரையினையும் கொண்ட ஒரு கூட்டுத்தாபனமாகும்.

மேற்படி சட்டத்தினால் சாட்டப்பட்டுள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களைச் செயற்படுத்துவதற்காக திட்டமிடல், இயக்கம் மற்றும் சேவைகள் கண்காணிப்பு, தர உறுதிப்பாடு, வெளியார் தொடர்புகள், நிதி மற்றும் கொள்வனவு ஆகிய நான்கு திணைக்களங்கள் மற்றும் நிர்வாகம், உள்ளகக் கணக்காய்வு, சட்டம் ஆகிய 3 பிரிவுகள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கீழ் செயற்படுவதுடன் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைமைக் காரியாலயம் 241, பூங்கா வீதி, கொழும்பு 05 என்ற விலாசத்தில் அமைந்துள்ளது. கொழும்பு பெஸ்ரியன் மாவத்தை மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துத் தரிப்பிடம் மற்றும் வவுனியா பிரதான பேருந்துத் தரிப்பிடம் என்பன தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கண்காணிப்பின் கீழ் கிளை அலுவலகங்களாகச் செயற்படுகின்றன.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 224 ஆக இருப்பதுடன், தலைவர், பணிப்பாளர் நாயகம் மற்றும் 04 பிரதான திணைக்களங்களின் கீழ் பணிபுரியும் பணிப்பாளர்கள் நால்வர் ஆகியோர் ஆணைக்குழுவின் சிரேஷ்ட முகாமைத்துவக்குழுவில் அடங்குவர்.

1.02 எமது நோக்கு மற்றும் பணி



எமது நோக்கு ...

நாட்டினுள் சமூக-பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்காக தரமிக்க, ஆகுசெலவு விளைபயன்மிக்க மற்றும் பாதுகாப்புமிக்க ஒன்றிணைக்கப்பட்ட போக்குவரத்துக் கட்டமைப்பு மற்றும் சேவை ஆகியவற்றின் மூலம் இலங்கையின் எல்லா குடிமக்களினதும் பல்வேறுபட்ட போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்திசெய்தலை உறுதிப்படுத்துதல்.



எமது பணி ...

பயணிகள் போக்குவரத்து தொடர்பான தேசிய கொள்கைக் குறித்து இலங்கை அரசிற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றும் திறன்மிகு பஸ் போக்குவரத்து முறைமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஒழுங்குபடுத்தற் சட்டகத்தை உருவாக்குதல்.

1.03 எமத இலக்கு

பாதுகாப்புமிகு, வசதியான, நம்பிக்கையான மற்றும் சமமான சந்தர்ப்பங்களுடன் எல்லோரும் பொதுப் போக்குவரத்துச் சேவையினை அடைந்து கொள்வதற்கான வாய்ப்பினை உகந்த அளவில் வழங்குதல்.

Our Goal

Allow access to public transport service for all with ensured safe, comfort, reliable and equal opportunities at optimum level

1.04 எமது குறிக்கோள்கள்

- *நம்பிக்கைமிகு மற்றும் சினேகபூர்வமான பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவையொன்றினை நாட்டினுள் தாபித்தல்.*
- *குறைந்தபட்ச போக்குவரத்து வசதிகள் அல்லது போக்குவரத்து வசதிகள் அற்ற பிரதேசங்களின் மக்களுக்கு பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவையினை வழங்குதல்.*
- *நவீன தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்டு சிறந்த போக்குவரத்துச் சேவையொன்றினை அறிமுகப்படுத்துதல்.*
- *பயணிகள் போக்குவரத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திச் செய்தல்.*
- *விசேட தேவையுடையவர்களுக்குத் தேவையான வசதிகளைப் பொதுப் போக்குவரத்துச் சேவையில் தாபித்தல்.*
- *நம்பிக்கைமிகு மற்றும் சினேகபூர்வமான பயணிகள் போக்குவரத்துச் சேவை மற்றும் பொருட்கள் போக்குவரத்துச் சேவை வசதிகளையும் பொதுப் பயணிகள் போக்குவரத்து ஊடகத்தின் மூலம் வழங்குதல்.*
- *பயணிகள் போக்குவரத்துச் சேவை தொடர்பிலான மனிதவள அபிவிருத்தி.*
- *எல்லா நபர்களாலும் சுமக்கக்கூடிய கட்டண முறையொன்றினை பொதுப் போக்குவரத்துச் சேவையில் அறிமுகப்படுத்துதல்.*
- *வாகனங்கள் மூலம் ஏற்படக்கூடிய சூழல் மாசடைவினைக் குறைப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளுதல்.*
- *வீதி விபத்துக்களைக் குறைத்தல்.*
- *சமூக நலனிற்காகத் தேவையான பயணிகள் போக்குவரத்துச் சேவையினை வழங்குதல்.*

1.05 எமது பெறுமானங்கள்



குழுப்பணி– பெறுபேறுகளை வழங்குவதற்கு நாம் ஒத்துழைப்புடன் செயற்படுகின்றோம்.

Teamwork – We collaborate to deliver results

நெகிழ்வுத்தன்மை – பிரச்சினைமிகு நிலைமைகளில் இருந்து விரைவாக இயல்பு நிலைமைக்கு மீள நாம் தயாராக உள்ளோம்.

Resilience – We ready to recover from the troublous situations quickly

நாணயத்தன்மை – நேர்மை மற்றும் நாணயத்தன்மையினை நாம் உச்ச மட்டத்தில் பேணுகின்றோம்.

Integrity – We maintain the utmost level of honesty & integrity

அக்கறை – நாம் பங்குதாரர்களிடம் இரக்கம் மற்றும் மற்றும் அக்கறை காட்டுகின்றோம்.

Caring –We display kindness and concern for stakeholders

சிறப்பு – எமது விநியோகங்களில் நாம் சிறந்த செயலாற்றலை வழங்குகின்றோம்.

Excellence –We provide excellence performance in our deliverables

முன்னேற்றம் - புத்தாக்கமிகு மற்றும் நடைமுறை முன்னேற்றத்தினை ஆதரிக்கின்றோம்.

Progressive –We uphold innovative & conductive progress

பாதுகாப்பு – பாதுகாப்புமிகு மற்றும் சுகநலமிக்க சுற்றாடலை நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

Safety –We ensure safe secure & healthy environment

1.06 தலைவரின் செய்தி



அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றும் செயற்பாட்டினுள் போக்குவரத்திற்கு பாரிய வகிபங்கொன்று உள்ளது. எந்நாட்டிலாயினும் போக்குவரத்து வலையமைப்பின் வினைத்திறன், பொருளாதார அபிவிருத்தி, சமூக மேம்பாடு குறித்து பெரிதும் செல்வாக்குச் செலுத்தும். அதன்படி, இலங்கையில் பொதுப் பேருந்து பயணிகள் போக்குவரத்துத் தொகுதியினை முறையாக, தரமிக்கதாக மற்றும் வினைத்திறன் மிக்கதாக ஆக்குவதற்கு தேவையான நியதிச்சட்ட செயற்பாடுகளைத் தொகுத்து, நாட்டின் போக்குவரத்துத் தேவைகளை முறைப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளைத் திட்டமிடுதல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பொறுப்பாக உள்ளது.

1991 இல 37ஐக் கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் நிறுவப்பட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, அச்சட்டத்தின் பிரகாரம் சாட்டப்பட்டுள்ள பணிகளாக, பேருந்துகள் மூலம் பயணிகள் போக்குவரத்துச் சேவைகளிற்குரிய தேசிய கொள்கை தொடர்பில் அரசிற்கு அறிவுரைப் பகர்தல் முதல் அக்கொள்கை தொடர்பில் கவனத்திற் கொண்டு பொதுமக்களின் பயணிகள் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட தரத்தினைக் கொண்ட பேருந்துச் சேவைகள் உள்ளனவா என மேற்பார்வை செய்தலும் பேணப்படவேண்டிய குறைந்தபட்ச மட்டத்தினைத் தீர்மானித்தல், பயணிகள் போக்குவரத்திற்கு பேருந்துகளிற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், அவ்வாறு வழங்குகையில் உரிய நிபந்தனைகளை நிர்ணயித்தல், அந்நிபந்தனைகளின் பிரகாரம் செயற்படுகின்றனவா என மேற்பார்வை செய்தல், அனுமதிப் பத்திரத்திற்காக கட்டணத்தை நிர்ணயித்தல் ஆகிய பணிகளும் பாடசாலை மாணவர்களுக்கு சலுகைக் கட்டணத்தில் பாடசாலைச் சேவையினை வழங்குதல், இலாபமற்ற பாதைகளில் பேருந்துச் சேவைகளை வழங்குவதற்கு கவனத்திற் கொள்ளல் மற்றும் அவ்வாறான சேவைகளை வழங்குபவர்களிற்கு நிதியுதவி வழங்குதல், கட்டணங்களை நிர்ணயித்தல் போன்ற பணிகளும் அதிகாரமிக்க உத்தியேகத்தரகள்களிற்கு தேவையான முகாமைத்துவ நிபுணத்துவ உதவி மற்றும் பேருந்துச் சேவைகளை வழங்குவதற்குரிய பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்கு அவசியமான தேவையான உதவி மற்றும் அறிவுரைகளை வழங்குதல் ஆகிய பணிகளும் பிரதானமானவை.

மேற்படி பணிகளை நிறைவேற்றுவதற்காகத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் பல்வேறு செயற்றிட்டங்கள் பல அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் பாடசாலை மாணவர்கள் உள மற்றும் உடல் ரீதியான கஷ்டங்களின்றி நேரகாலத்துடன் பாடசாலைக்கு செல்லும் மற்றும் பாதுகாப்பாக வீடு திரும்பும் வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்குடன் 'சிசு செரிய' பேருந்துச் சேவை, போக்குவரத்து வசதிகளற்ற பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு தமது நாளாந்த தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு 'கெமி செரிய' பேருந்துச் சேவை, இரவு வேளைகளில் மற்றும் அதிகாலையில் பேருந்துச் சேவைகளில் காணப்பட்ட பற்றாக்குறையினால் பயணிகள் முகங்கொடுத்த சௌகரியங்களை இல்லாதொழிக்க 'நிசி செரிய' பேருந்துச் சேவை ஆகியவற்றை ஆரம்பித்து செயற்படுத்துதல் முக்கிய இடம் வகிக்கின்றது.

இதற்கு மேலதிகமாக, பொதுப்பேருந்துப் பயணிகள் போக்குவரத்துத் துறையின் தரத்தினை விருத்தி செய்வதற்காக செயற்றிட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் பல செயற்படுத்தப்பட்டன. அதன்

பிரகாரம், பேருந்துக் கட்டணங்களை அறவிடுகையில் ஏற்படும் முறைகேடுகள் மற்றும் பயணிகள் புகார்களைக் குறைப்பதற்கு புதிய தொழில்நுட்ப முறைமைகளைப் பின்பற்றி பொதுப் பயணிகள் போக்குவரத்துப் பேருந்துக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு இலத்திரனியல் அட்டையொன்றினை அறிமுகப்படுத்தம் செயற்பாடு, பேருந்து ஓட்டுனர்களின் வியாபார எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய வகையில் எல்லா பேருந்து ஓட்டனர்களுக்கும் சம வாய்ப்பினை வழங்கும் வகையில் விஞ்ஞான ரீதியாக ஒன்றிணைந்த நேர அட்டவணைகளைத் தயாரிக்கும் செயற்றிட்டம், போக்குவரத்து அதிகாரிகளின் முகாமைத்துவம், மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து உரிமையாளர்கள், பாடசாலை வாகனக் கட்டுப்பாட்டுக் குழுவினர் உட்பட்ட பயணிகள் போக்குவரத்துத் துறையில் உள்ள பல்வேறு தரப்பினர் ஆகியோருக்கு போக்குவரத்துத் துறை தொடர்பில் அறிவூட்டும் வேலைத்திட்டம், வினைத்திறன்மிக்கதாக பேருந்துகளைக் கட்டுப்படுத்துவதற்கும் பயணிகள் முறைபாடுகளை விசாரணை செய்தல் மற்றும் தகவல்களை வழங்குவதற்கும் GPS தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தும் வகையில் பொதுப் பேருந்துகளில் GPS தொகுதிகளைப் பொருத்துதல், அவ்வாறே போக்குவரத்துத் தொடர்பில் எல்லதத் தரவுகளையும் ஒன்று சேர்த்து பரந்த விடய பரப்பொன்றினை உள்ளடக்குமாறு தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கையினை வெளியிடுதல், கொழும்பு பெஸ்ரியன் மாவத்தை பிரதான பேருந்துத் தரிப்பிடம் மற்றும் வவுனியா பிரதான பேருந்துத் தரிப்பிடம் ஆகியவற்றில் பேருந்து இயக்கம் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை முகாமைப்படுத்தல் ஆகிய செயற்றிட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் பிரதானமானவை ஆகும்.

2022ஆம் ஆண்டிலும், அனைத்து உலகமக்களைப் போன்றே இலங்கையும் முகங்கொடுக்க வேண்டியிருந்த கொரோனா தொற்றுப் பரவல் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இவ்வெல்லாச் செயற்றிட்டங்களையும் இயலுமான அதிகபட்ச அளவில் செயற்படுத்தி பொதுப் போக்குவரத்துத் துறையின் தரத்தினை விருத்தி செய்து செயற்றிறன்மிக்க பொதுப் பேருந்துப் போக்குவரத்துச் சேவையொன்றினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அரச கொள்கையினை முறையாகப் பின்பற்றி, பொதுப் போக்குவரத்துத் துறையில் வினைத்திறன் மற்றும் விளைபயனை மேம்படுத்துவதற்கு நவீன தொழில்நுட்பத்தினை அதிகமதிகமாகப் பயன்படுத்துவதற்கும் அதன் மூலம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கும் அனுசரணை வழங்கிய கௌரவ போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சர், அமைச்சின் செயலாளர்கள் உட்பட அமைச்சின் எல்லா அதிகாரிகளுக்கும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபை மற்றும் அனைத்து பணிக்குழாத்தினருக்கும் பல்வேறு வகையில் ஆதரவு நல்கிய தனியார் பேருந்து உரிமையாளர்கள் மற்றும் அவர்களது பணிக் குழாத்தினருக்கும் இபோச மற்றும் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர்கள் உட்பட அந்நிறுவனங்களின் அனைத்து பணிக்குழத்தினருக்கும் மற்றும் ஏனைய அனைத்துத் தரப்பினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சஷி வெல்கம
தலைவர்,
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

1.07 ஆணைக்குழுவின் அங்கத்தவர் குழு

2022 ஜனவரி முதல் 2022 ஏப்பிரல் வரை

1.	திரு. சஷி வெல்கம தலைவர், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு	- தலைவர்
2.	திரு. ரீ.எம்.ஜே. பண்டார மேலதிகப் பணிப்பாளர் நாயகம், அரச தொழில் முயற்சிகள் திணைக்களம்	- உறுப்பினர் (பதவி வழி)
3.	திருமதி. ஏஸ். ஜலதீபன் சிரேஷ்ட உதவிச் செயலாளர், நிதி அமைச்சு	- உறுப்பினர் (பதவி வழி)
4.	திரு. ஏ.எம்.ஆர்.ஜே.கே. ஜயசிங்க சிரேஷ்ட உதவிச் செயலாளர், போக்குவரத்து அமைச்சு	- உறுப்பினர் (பதவி வழி)
5.	திரு. எம்.வீ.எம்.டீ.பீ. தனுஷ்க முதலிகே முகாமைத்துவப் பணிப்பாளர், சந்தமாலி டுவர்ஸ் தனியார் நிறுவனம்	- உறுப்பினர்
6.	திரு. எஸ்.ஆர். கொடமுணே பணிப்பாளர், நிஷானீஸ் தனியார் நிறுவனம்	- உறுப்பினர்
7.	திரு. கே. புத்ததாச முன்னாள் செயற்படு பணிப்பாளர், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு	- உறுப்பினர்
8.	திரு. பீ.ஏ.டீ.ஏ. சம்பத் ரணசிங்க தலைவர், பொதுஜன தனியார் பேருந்துச் சங்கம்	- உறுப்பினர்

2022 யூலை முதல் 2022 ஆகஸ்ட் வரை

1.	திரு. சஷி வெல்கம தலைவர், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு	- தலைவர்
2.	திரு. ரீ.எம்.ஜே. பண்டார மேலதிகப் பணிப்பாளர் நாயகம், அரச தொழில் முயற்சிகள் திணைக்களம்	- உறுப்பினர் (பதவி வழி)
3.	திருமதி. ஏஸ். ஜலதீபன் சிரேஷ்ட உதவிச் செயலாளர், நிதி அமைச்சு	- உறுப்பினர் (பதவி வழி)
4.	திருமதி நயோமி ஜயவர்த்தன சிரேஷ்ட உதவிச் செயலாளர், போக்குவரத்து அமைச்சு	- உறுப்பினர் (பதவி வழி)
5.	திரு. எம்.வீ.எம்.டீ.பீ. தனுஷ்க முதலிகே முகாமைத்துவப் பணிப்பாளர், சந்தமாலி டுவர்ஸ் தனியார் நிறுவனம்	- உறுப்பினர்
6.	திரு. எஸ்.ஆர். கொடமுணே பணிப்பாளர், நிஷானீஸ் தனியார் நிறுவனம்	- உறுப்பினர்
7.	திரு. கே. புத்ததாச முன்னாள் செயற்படு பணிப்பாளர், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு	- உறுப்பினர்
8.	திரு. பீ.ஏ.டீ.ஏ. சம்பத் ரணசிங்க தலைவர், பொதுஜன தனியார் பேருந்துச் சங்கம்	- உறுப்பினர்

2022 நவம்பர் முதல் 2022 திசெம்பர் வரை

1.	திரு. சஷி வெல்கம தலைவர், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு	- தலைவர்
2.	திரு. ரீ.எம்.ஜே. பண்டார மேலதிகப் பணிப்பாளர் நாயகம், அரச தொழில் முயற்சிகள் திணைக்களம்	- உறுப்பினர் (பதவி வழி)
3.	திருமதி. ஏஸ். ஜலதீபன் சிரேஷ்ட உதவிச் செயலாளர், நிதி அமைச்சு	- உறுப்பினர் (பதவி வழி)
4.	திருமதி நயோமி ஜயவர்த்தன சிரேஷ்ட உதவிச் செயலாளர், போக்குவரத்து அமைச்சு	- உறுப்பினர் (பதவி வழி)
5.	திரு. எம்.வீ.எம்.டீ.பீ. தனுஷ்க முதலிகே முகாமைத்துவப் பணிப்பாளர், சந்தமாலி டுவர்ஸ் தனியார் நிறுவனம்	- உறுப்பினர்
6.	திரு. எஸ்.ஆர். கொடமுணே பணிப்பாளர், நிஷானீஸ் தனியார் நிறுவனம்	- உறுப்பினர்
7.	திரு. ரஞ்சித் ஜீ ரூபசிங்க தலைவர், இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி	- உறுப்பினர்
8.	திரு. அமில ரன்மண்டல பணிப்பாளர் சபை உறுப்பனர், இலங்கை உள்ளூராட்சி நிறுவனம்	- உறுப்பினர்

1.08 தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் சிரேஷ்ட முகாமைத்துவக்குழு

1.	திரு. சஷி வெல்கம	-தலைவர்
2.	கலாநிதி நிலான் மிரெண்டா	-பணிப்பாளர் நாயகம்
3.	திருமதி. கே.ஏ.சீ. கருணாரத்ன	-பணிப்பாளர் (திட்டமிடல்)
4.	திரு. பீ.எம். இப்திகார்	-பணிப்பாளர் (இயக்கம் மற்றும் கண்காணிப்பு)
5.	திருமதி. ஏஸ்.டீ. அத்துகோரல	-பணிப்பாளர் (தரப் பாதுகாப்பு மற்றும் வெளி தொடர்புகள்)
6.	திரு. டீ.எம்.கே. திசாநாயக்கா	- பணிப்பாளர் (நிதி மற்றும் பெறுகை)
7.	திரு. பி.ஜீ.சீ. கருணாரத்ன	- உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்)
8.	திரு. பி.ஆர்.ஏ.ரீ.என். ரணதுங்க	- உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்)
9.	திரு. ஏச்.பீ.சீ. குமார	- உதவிப் பணிப்பாளர் (இயக்கம் மற்றும் கண்காணிப்பு)
10.	திரு. ஆர்.ஏ. இந்திக்க லால்	- உதவிப் பணிப்பாளர் (இயக்கம் மற்றும் கண்காணிப்பு)
11.	திரு. முதித்த நவரத்ன	- உதவிப் பணிப்பாளர் (தரப் பாதுகாப்பு மற்றும் வெளி தொடர்புகள்)
12.	திருமதி. எல்.எஸ். விஜேந்திர	- உதவிப் பணிப்பாளர் (தரப் பாதுகாப்பு மற்றும் வெளி தொடர்புகள்)
13.	திருமதி. பி.ஏ.என். பெர்னாண்டோ	- உதவிப் பணிப்பாளர் (பெறுகை)
14.	திருமதி. டீ.என்.வீரதுங்க	- உதவிப் பணிப்பாளர் (நிதி)
15.	திருமதி. ஏ.ஏ.எச்.என். முணசிங்க (2022.10.27ஆந் திகதி வரை)	- உதவிப் பணிப்பாளர் (சட்ட)
16.	திருமதி. ஏஸ்.என். பெரேரா	- உதவிப் பணிப்பாளர் (போக்குவரத்துப் பொறியியலாளர்)
17.	திருமதி ரீ.டீ.எஸ்.ரீ. தேநுவர	- உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)
18.	திருமதி ஏ.எல். நெல்கா	- உதவிப் பணிப்பாளர் (உள்ளகக் கணக்காய்வு)


1.09 ஆணைக்குழுவின் கட்டமைப்பு

2022ஆம் ஆண்டின் இறுதியில் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 224 ஆக இருந்ததுடன், சேவையில் ஈடுபட்டுள்ள நிரந்தரப் பணியாளர்களின் எண்ணிக்கை 176 ஆகும்.


2022.12.31 ஆந் திகதியில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஊழியர் எண்ணிக்கை

தொடரிலக்கம்	பதவிப் பெயர்	பணியாளர் தொகுதி	அங்கீகரிக்கப்பட்ட பணியணி	2022.12.31 ஆந் திகதியில் சேவையில் ஈடுபட்டிருந்த பணியணி	2022.12.31 ஆந் திகதியில் ஊழியர் வெற்றிடம்	2022.12.31ஆந் திகதியில் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபட்டிருந்த பணியணி
01	பணிப்பாளர் நாயகம்	HM 2- 1	01	01	-	-
02	பணிப்பாளர்	HM 1-1	04	04	-	-
03	உதவிப் பணிப்பாளர்	MM 1-1	17	11	6	-
04	கனிஷ்ட முகாமையாளர்	JM 1-1	21	19	2	-
05	போக்குவரத்துத் தொகுதி பகுப்பாளர்	MA 4	36	34	2	-
06	முகாமைத்துவ உதவியாளர்	MA 2-1	03	0	3	-
07	முகாமைத்துவ உதவியாளர்	MA 1-1	81	65	16	6
08	சாரதி	PL 3	13	13	0	-
09	அலுவலக உதவியாளர்	PL 1	48	29	19	2
	மொத்தம்		**224**	**176**	**48**	**8**


மூலம் - கட்டுப்பாட்டுத் திணைக்களம், தேபோஆ


NTC Organization Structure
Chairman
HM- 2.1
Director General
HM- 1.1
Director Planning
Director Q.A.
Director Operation
Director F & P
MM- 1.1
Engineers
AD Planning
AD QA
AD IT
AD Operation
Accoun-tant
AD/ Procure.
AD Admin.
AD/ Legal
Internal Auditor
JM- 1.1
Junior Manager
Network Administrator
Junior Manager
Finance Assistant
Procurement Officer
Admin Officer
Legal Officer
MA-4
Infrastructure Development Unit
Planning Dept. Units
1 2 3 4
QA Dept. Units
1 2 3 4
IT Division
Operations Dept. Units
1 2 3 4
Account Division
Procurement Division
Administration Division
Internal Audit Division
MA 1.1
Mgt. Asst.
Mgt. Asst.
Mgt. Asst.
Mgt. Asst.
Mgt. Asst.
Mgt. Asst.
Mgt. Asst.
Mgt. Asst.
Mgt. Asst.
PL3& PL1
Office Asst.
Office Asst.
Office Asst.
Office Asst.
Office Asst.
Office Asst.
Office Asst.
Office Asst. & Drivers
Mgt. Asst.
Mgt. Asst.


Private Bus fleet regulated by NTC and PTAs 2022




No of Operated Bus Regulated by NTC & PTAs



Interprovincial Private Buses with GPS Vs Bus Fleet





Inter-provincial Private Bus Services













2022 ஆண்டின் செயலாற்றுகை

பேருந்துகள் மூலம் பயணிகள் போக்குவரத்திற்கான தேசிய கொள்கை குறித்து அரசிற்கு அறிவுரை வழங்குதல் மற்றும் அக்கொள்கையினை நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றிற்காக 1991 இல 37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நிறுவப்பட்டது.

1991 இல 37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டமானது முறையே 1996 இல 30 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்திய) சட்டத்தின் மூலமும், 2005 இல 27 கொண்ட இலங்கை போக்குவரத்துச் சபை சட்டத்தின் மூலமும் 2017 இல 6 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்திய) சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டுள்ளது.

அதன் மூலம் சாட்டப்பட்டுள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களின் பிரகாரம், பல்வேறு விடயதானங்கள் தொடர்பில் அமைச்சரவையின் அனுமதியின் பிரகாரம், இலங்கை மக்களுக்கு வினைத்திறன்மிக்க, உயர் தரங்கொண்ட சூழல் நேயமிக்க, வசதியான போக்குவரத்துச் சேவையொன்றினைப் பெற்றுக் கொடுப்பதற்கு மற்றும் போக்குவரத்திற்கு நவீன அணுகுமுறையொன்றினை உருவாக்குவதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு செயற்றிட்டங்கள் பலவற்றை நடைமுறைப்படுத்தியுள்ளது.

தொடரிலக்கம்	மீண்டெழும் செயற்றிட்டங்கள்
01.	**சமூக நலனை முதன்மைப்படுத்திய பேருந்துச் சேவைகளை வழங்குதல்**
	i. சிசு செரிய செயற்றிட்டம்
	ii. கெமி செரிய செயற்றிட்டம்
	iii. நிசி செரிய செயற்றிட்டம்
02.	**தனியார் பேருந்துத்துறைக்கான சீர்த்திருத்தங்கள்**
	i. பேருந்துத் தரிப்பிடங்களைப் பராமரித்தல் மற்றும் சீர்த்திருத்தல்
	ii. கேள்வி மற்றும் சேவைத் தர ஆய்வு
03.	தரம் மற்றும் கட்டண ஒழுங்குமுறை
	i. பேருந்து ஊழியர் குழுவினரைப் பயிற்றுவித்தல்
	ii. நேர அட்டவணைகள் மற்றும் சேவை மேற்பார்வை
	iii. பேருந்துக் கட்டணங்களை நிர்ணயித்தல் மற்றும் திருத்தல்
	iv. தகவல் தொழில்நுட்பத் தொகுதி
	v. தூரப் பயண சேவை சமிக்ஞைப் பலகைகள்
	vi. GPS உபகரணத் தொகுதியை மற்றும் கட்டுப்பாட்டுக் கூடத்தினைப் பராமரித்தல்
	vii. தேசிய போக்குவரத்துச் சட்டத்தினைத் தயாரித்தல்
04.	**தேபோஆ ஊழியர் குழாத்தினரிற்கும் போக்குவரத்துத் துறையில் நேரடியாகத் தொடர்புடைய நிறுவனங்களின் உத்தியோகத்தர்களிற்குப் பயிற்சி அளித்தல்**
05.	**தேசிய புள்ளவிபர அறிக்கையினைத் தயாரித்து வெளியிடுதல்**
06.	**போக்குவரத்து தொடர்புடைய தரப்பினருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்**

தொடரிலக்கம்	மூலதனச் செயற்றிட்டங்கள்
01.	முன்கொடுப்பனவு அட்டை அறிமுகம் (Electronic Fare Collection ¨ஈ-ரிக்கெட்)
02.	பேருந்துத் தரிப்பிடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்
03.	நிறுவனஞ்சார் சீர்த்திருத்தங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்

அச்செயற்றிட்டங்களின் 2022 ஜனவரி 01ஆந் திகதி முதல் திசெம்பர் 31வரையிலான காலப்பகுதியிற்கான முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

2.01 சமூக நலனை முதன்மைப்படுத்திய பேருந்துச் சேவையினை வழங்கும் செயற்றிட்டம்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழச் சட்டத்தின் கீழ் பொறுப்புச் சாட்டப்பட்டுள்ள பாடசாலைச் சிறார்களுக்கான மற்றும் பல்கலைக்கழகங்களின், தொழில்நுட்பக் கல்லூரிகளின், மற்றும் அவற்றிற்குச் சமமான வேறு நிறுவனங்களின் மாணவர்களுக்கான சலுகைக் கட்டணத்தில் பாடசாலைச் சேவையினை வழங்குதல் என்ற பணியின் பிரகாரம், "சிசு நெரிய" பேருந்துச் சேவையும் இலாபமற்ற வீதிகளில் பேருந்துச் சேவைகளை வழங்குவதைக் கவனத்திற் கொள்ளல் மற்றும் தேவைப்படுமிடத்து அவ்வாறான சேவைகளை வழங்குவோருக்கு நிதியுதவிகளை வழங்குவதை உறுதிப்படுத்துதல் ஆகிய பணிகளின் பிரகாரம் "கெமி செரிய" மற்றும் "நிசி செரிய" ஆகிய பேருந்துச் சேவைகளும் சமூக நலநன முதன்மைப்படுத்திய பேருந்துச் சேவை செயற்றிட்டத்தின் கீழ் செயற்படுகின்றன.

'சிசு செரிய' பாடசாலைப் பேருந்துச் சேவை



சலுகைக் கட்டண முறை அடிப்படையில் செயற்படும் இச் "சிசு செரிய" பேருந்துச் செயற்றிட்டம், பாடசாலை சிறார்களுக்காகவே ஒதுக்கப்பட்ட நம்பிக்கைமிகுந்த பாதுகாப்புடன் கூடிய, போக்குவரத்துச் சேவையொன்றினை பாடசாலைச் சிறார்களுக்கு வழங்குவதை நோக்காகக் கொண்டு 2005ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இச்செயற்றிட்டத்தின் கீழ் இபோச மற்றும் தனியார் பேருந்துகள் இயங்குவதுடன், இப்பேருந்துகளில் பயணிக்கும் பாடசாலை சிறார்களிடமிருந்து சாதாரண பேருந்துக் கட்டணத்தில் அரைப் பங்கினை மாத்திரம் அறவிடுதல் தனித்துவமிக்கதாகும். அதன் மூலம் ஓட்டுனருக்கு ஏற்படும் நிதிசார்

இழப்பினை மீளளிப்புச் செய்வதற்கு பாடசாலை சிறார்களை ஏற்றிச்செல்லும் 01 கி.மீற்றருக்கு உதவித்தொகையொன்று அதிகபட்சம் 110 கி.மீ.க்கு (காலை மாலை இரண்டு பயணமுறைக்கான) அரசினால் கொடுப்பனவு வழங்கப்படும்.

பௌதிக முன்னேற்றம்

2022ஆம் ஆண்டிற்கு 2022.04.30ஆந் திகதியாகையில் 52 புதிய சேவைகளை ஆரம்பிக்கப்பட்டதுடன், புதிய சிசு செரிய சேவைகளை ஆரம்பித்தல் 2022 மே மாதம் முதல் இடைநிறுத்தப்பட்டது. அதாவது, 2022 மார்ச் மாதம் முதல் அடிக்கடி எரிபொருள் விலை அதிகரித்தல் மற்றும் பேருந்துகளின் உதிரிப்பாகங்களின் விலை அதிகரித்தல் காரணமாக பேருந்துகளின் இயக்க ஆகுசெலவு அதிகரித்தமையால் சிசு செரிய பேருந்துகளுக்கு வழங்கப்பட்ட உதவுத்தொகையினைத் திருத்தஞ் செய்ய வேண்டி ஏற்பட்டமையால் 2022ஆம் ஆண்டிற்கான தேசிய வரவுசெலவில் சிசு செரிய செயற்றிட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் ஏற்கனவே உள்ள சேவைகளை மேற்கொள்வதற்கு போதியதாகையால் புதிய சேவைகளை ஆரம்பிக்காது ஏற்கனவே செயற்படும் பேருந்துச் சேவைகளை மாத்திரம் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. எனினும், மீண்டும் பல முறை எரிபொருள் விலை அதிகரித்ததன் காரணமாக பேருந்துகளின் இயக்க ஆகுசெலவு மிகத் தீவிரமாக அதிகரித்தமையால் இச்செயற்றிட்டத்தின் கீழ் செயற்பட்ட பேருந்துகளின் இயக்கத்தினைத் தொடர்ந்தும் பேணுவதற்கு 2022ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட 650.00 மி. ரூபாவிற்கு மேலதிகமாக மேலும் 566.00 மி.ரூபா தொகையினைக் கோரி போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளர் ஊடாக வரவுசெலவு திட்ட பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம், இடைக்கால வரவுசெலவு திட்டத்தின் மூலம் 900 மி. ரூபா இச்செயற்றிட்டத்திற்காக 2022 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டது.

எரிபொருள் விலை துரிதமாக அதிகரித்ததற்கு இணங்க தனியார் பாடசாலை வேன் வண்டிகளில் மற்றும் பேருந்துகளில் அறவிடும் கட்டணங்களும் பாரிய அளவில் அதிகரித்தமை காரணமாக, சிசு செரிய செயற்றிட்டத்தின் கீழ் பேருந்துகளை ஈடுபடுத்துமாறு நாள்தோறும் பெற்றோர்களினால் மற்றும் பாடசாலை அதிபர்களினால் கோரல்கள் பல தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு நாள்தோறும் அதிகரித்த கோரல்கள் பால் கவனத்தைச் செலுத்தி பாடசாலைச் சிறரர்களிற்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக சிசு செரிய சேவைக்கு மாற்றீடொன்றாக, கௌரவ அமைச்சர் அவர்களின் ஆலோசனைப் பிரகாரம், மாகாணத்தினுள் சாதாரண பயணிகள் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகளை, சாதாரண பேருந்துக் கட்டண அறவிட்டு உரிய போக்குவரத்து அதிகார சபையினால் விதித்துள்ள நிபந்தனைகளுக்கு மேலதிகமாக விசேட நிபந்தனைகள் தொகுப்பொன்றின் கீழ் 'பாடசாலைச் சேவை' என்ற பெயரில் காலைநேர பாடசாலைப் பயண முறை மற்றும் பின்னேர பயண முறைகளில் இயங்கச் செய்வதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் மேற்பார்வையின் கீழ் மாகாணப் போக்குவரத்து அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2022.12.31ஆந் திகதி ஆகையில் அவ்வாறு ஈடுபடுத்தப்பட்டுள்ள 'பாடசாலைச் சேவை' பேருந்துகளின் எண்ணிக்கை 53 ஆகும். அதன் பிரகாரம் 2022.12.31ஆந் திகதி வரை செயற்பாட்டிலுள்ள 'சிசு செரிய' மற்றும் 'பாடசாலைச் சேவை' பேருந்துகளின் எண்ணிக்கை மாகாண மட்டத்தில் கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

தொடரிலக்கம்	மாகாணம்	'சிசு செரிய' பேருந்துச் சேவை	'பாடசாலைச் சேவை'
01	மேல்	442	53
02	தென்	107	-
03	வடமேல்	360	-
04	வடமத்திய	202	-
05	சப்பிரகமுவா	124	-
06	ஊவா	146	-
07	கிழக்கு	126	-
08	மத்திய	56	-
09	வடக்கு	37	-
10	மாகாணங்களுக்கு இடையில்	17	-
	மொத்தம்	**1617**	**53**

புதிய சிசு செரிய சேவைகளுக்காக 2022.12.31ஆந் திகதியாகையில் கிடைக்கப் பெற்றுள்ள கோரல்களின் எண்ணிக்கை மாகாண மட்டத்தில் கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

தொடரிலக்கம்	மாகாணம்	கோரல்களின் எண்ணிக்கை
1	மேல்	251
2	மத்திய	06
3	தென்	23
4	வடமேல்	03
5	வடமத்திய	10
6	சப்பிரகமுவா	18
7	ஊவா	01
	மொத்தம்	**312**

கிராமிய பேருந்துச் சேவை செயற்றிட்டம் -"கெமி செரிய"

எவ்விதப் பேருந்துச் சேவையும் செயற்படாத, சமூக ரீதியாகப் பேருந்துச் சேவையொன்று அவசியமாயினும் இலாபமற்ற பாதையென்பதால் பயணிகள் போக்குவரத்திற்கு ஓட்டுனர்கள் முன்வராத கிராமப்புற பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு 2005ஆம் ஆண்டில் "கெமி செரிய" செயற்றிட்டத்தினை ஆரம்பித்தது.



‘கெமி செரிய’ பேருந்துச் சேவைக்கு ஓட்டுனர்களைத் தெரிவுசெய்தல் திறந்த கேள்வி கோரல் முறைமையின் கீழ் மேற்கொள்ளப்படுவதுடன், அதன்போது ஒரு கி.மீற்றருக்கு குறைந்த ஏலத்தினைக் கோரும் ஓட்டுனர் தெரிவு செய்யப்படுவார். அவ்வாறு தெரிவுசெயயப்பட்ட ஓட்டுனருக்கு உரிய போக்குவரத்து அதிகார சபையினால் கிராமப்புறப் பாதைகளில் பயணிகள் போக்குவரத்திற்கான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதுடன், அப்பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் மற்றும் மாகாணப் போக்குவரத்து அதிகார சபையின் பரிந்துரை பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் உரிய பேருந்து உரிமையாளர் கெமி செரிய செயற்றிட்டத்தினுள் உள்வாங்கப்பட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் உதவித்தொகை அதிகபட்சம் மூன்று வருடங்களுக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் செலுத்தப்படும். மூன்று வருடங்களின் பின்னர், அப்பாதை பொருளாதார ரீதியாக இலாபகரமிக்க பாதையாக மாறக்கூடும் என்பதால் உதவித்தொகைக் கொடுப்பனவு நிறுத்தப்படும். அதன் படி தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்ட கெமி செரிய சேவைகள் பல தற்போது பொருளாதார ரீதியாக இலாபகரமிக்கதாகக் கிரமப்புற மக்களுக்கு சேவையினை வழங்கிச் செயற்படுகின்றன.

பௌதிக முன்னேற்றம்

2022ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இச்செயற்றிட்டத்தின் கீழ் 09 பேருந்துச் சேவைகள் உதவித்தொகையினைப் பெற்று செயற்பட்டதுடன், அவற்றுள் 08 பேருந்துச் சேவைகளிற்குரிய உதவித்தொகைக் கால எல்லை 2022ஆம் அண்டு ஆகஸ்ட் மாதம் முதல் முடிவுற்றது.

2022ஆம் ஆண்டிற்கான புதிய கெமி செரிய சேவையொன்றினை ஆரம்பிப்பதற்கு தென் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதுடன், கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் ஒரு கெமி செரிய சேவை வீதம் ஆரம்பிப்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், கீழ் குறிப்பிட்டுள்ளவாறு 5 கெமி செரிய சேவைகளை ஆரம்பிப்பதற்கான கோரிக்கை கிடைக்கப் பெற்றுள்ளது. எனினும், மேற்படி விபரித்துள்ளவாறு பேருந்துகளின் இயக்க ஆகுசெலவு மிகவும் துரிதமாக அதிகரித்தமையால் இச்செயற்றிட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்படும் பேருந்துச் சேவைகளின் உதவித்தொகையும் அதிகரிக்கின்றமையால் 2022 மே மாதத்தின் பின்னர்இச்செயற்றிட்டத்தின் கீழ் புதிய சேவைகளை ஆரம்பித்தல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

தொடரிலக்கம்	மாகாணம்	கோரல் எண்ணிக்கை
1	கிழக்கு	2
2	ஊவா	2
3	தென்	1
	மொத்தம்	**5**

இரவு நேர பேருந்து சேவை செயற்றிட்டம் - “நிசி செரிய”

இரவு வேளையிலும் அதிகாலையிலும் பொதுப் போக்குவரத்துச் சேவையினைத் தொடர்ந்தும் மேற்கொண்டு செல்வதை ஊக்குவிப்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால்

இச்செயற்றிட்டம் 2005ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் இரவு நேரத்தில் மற்றும் அதிகாலையில் பொதுப் போக்குவரத்துப் பேருந்துகள் தொடர்ந்தும் செயற்படாமை காரணமாக பொதுமக்கள் முகங் கொடுக்கும் சிரமங்களைக் குறைத்து அவர்களுக்கு ஒரு நிரந்தரமான பொதுப் போக்குவரத்துப் பேருந்துச் சேவையினை வழங்குதல், பொது மக்களுக்கு வேறு போக்குவரத்து ஊடகங்களைப் (முச்சக்கர வண்டி, வாடகை வாகனங்கள்) பெற்றுக் கொள்வதற்கு செலவிடப்படும் அதிகக் கிரயத்தினையும் காலத்தினையும் குறைத்தல் என்பன இச்செயற்றிட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

அதன் பிரகாரம், இச்செயற்றிட்டத்தின் கீழ் இரவின் கடைசிப் பயண முறை மற்றும் அதிகாலையின் முதல் பயண முறைக்கு உதவித்தொகையாக தொகையொன்று அரசினால் கொடுப்பனவு செய்யப்படுவதுடன், பொதுமக்களிடமிருந்து அறவிடப்படுவது குறிப்பிட்ட பேருந்துக் கட்டணம் மாத்திரமே.



பௌதிக முன்னேற்றம்

2022ஆம் ஆண்டிற்காக 2022.04.30ஆந் திகதியாகையில் 10 புதிய சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் தேசிய வரவுசெலவுத் திட்டத்தில் இச்செயற்றிட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடு ஏற்கனவே உள்ள சேவைகளை மேற்கொள்வதற்கு செலவிட வேண்டியேற்பட்டமையால் புதிய நிசி செரிய சவைகளை ஆரம்பித்தல் பணிப்பாளர் சபையின் அனுமதியின் பிரகாரம் மே மாதம் முதல் இடைநிறுத்தப்பட்டது.

அதன் பிரகாரம், 2022.12.31ஆந் திகதியில் செயற்பாட்டில் உள்ள நிசி செரிய சேவைகள் மாகாண அடிப்படையில் கீழ்வருமாறு.

தொடரிலக்கம்	மாகாணம்	'நிசி செரிய' பேருந்துச் சேவை
01	மேல்	64
02	தென்	43
03	வடமேல்	21
04	வடமத்திய	6

05	சப்பிரகமுவா	14
06	ஊவா	11
07	கிழக்கு	1
08	மத்திய	51
09	வடக்கு	5
	மொத்தம்	**216**

மேலும், கீழ் குறிப்பிட்டுள்ளவாறு 305 நிசி செரிய சேவைகளை ஆரம்பிப்பதற்கான கோரல்கள் இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் விடுக்கப்பட்டுள்ளன.

தொடரிலக்கம்	**மாகாணம்**	**கோரல் எண்ணிக்கை**
1	மேல்	67
2	மத்திய	55
3	தென்	48
4	வடமேல்	41
5	வடமத்திய	11
6	சப்பிரகமுவா	51
7	ஊவா	22
8	கிழக்கு	4
9	வடக்கு	6
	மொத்தம்	**305**

“சிசு செரிய”, “கெமி செரிய”, “நிசி செரிய” செயற்றிட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்

2022ஆம் ஆண்டு ஆரம்பிக்கையில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 1,565 சிசு செரிய சேவைகள், 9 கெமி செரிய சேவைகள், 194 நிசி செரிய சேவைகள் என்பனவற்றிற்கு உதவித்தொகை செலுததி மேற்கொண்டுச் செல்வதற்கு மற்றும் 2022ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த புதிய சேவைகளிற்கு உதவித்தொகை செலுத்துவதற்கு தேசிய வரவுசெலவு திட்டத்தில் மீண்டெழும் செயற்றிட்டங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை 650 மில்லியன் ரூபாவாகும். எனினும், 2022ஆம் ஆண்டின் இடைக்கால வரவு செலவு திட்டத்தின் மூலம் அத்தொகை 900.0 மில்லியன் ரூபாவாகத் திருத்தஞ் செய்யப்பட்டது.

எனினும், 2022ஆம் ஆண்டிற்காக 725.0 மி. ரூபா பொதுத் திறைசேரியினால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன், அந்த 725.0 மி.ரூபா, 2022.12.31ஆந் திகதியாகையில் உதவித்தொகையாகச் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு நிதி குறைவாகப் பெற்றுக் கொடுத்தமையால் விசேடமாக சிசு செரிய பேருந்துச் சேவை வழங்குனர்களில் பாரிய எண்ணிக்கையானோர் அச்செயற்றிட்டத்தை கைவிட்டுச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக 2023 ஜனவரி மாதத் தரவுகளின் படி புலனாயுள்ளது.

2.02 பேருந்து நிலையங்களைப் பராமரித்தல் மற்றும் பேருந்து தரிப்பிடங்களைச் செயற்படுத்தல் செயற்றிட்டம்

இச்செயற்றிட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டன.

- தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நிர்வாகத்தின் கீழ் காணப்படும் பெஸ்ரியன் மாவத்தை தனியார் தூரசேவை பேருந்து நிலைய மற்றும் வவுனியா பேருந்து நிலைய இயக்க நடவடிக்கைகளை முறைப்படுத்தலை மற்றும் அவ்விடங்களைப் பராமரித்தலை மேற்கொள்ளுதல்
- தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் முகாமை செய்யப்படும் மாகும்புர, கடுவளை, கடவத்தை பேருந்து நிலையங்களில் இருந்து செயற்படும் அதிவேகப் பாதையின் ஊடாக மேற்கொள்ளப்படும் பேருந்து இயக்க நடவடிக்கைகளை முறைப்படுத்துதல்
- பேருந்துகளின் தரப் பரிசோதனைக்கு நடமாடும் திட்டங்களை மேற்கொள்ளுதல்
- பேருந்துகளின் விபரங்கள் குறித்து போக்குவரத்து அதிகாரசபை அதிகாரிகளுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்துதல்
- சிங்களப் புத்தாண்டு பேருந்துச் சேவைகள், ஏனைய விசேட விழாக்களுக்கு பயணிகளின் தேவைகள் பிரகாரம் பேருந்துச் சேவைகளை முறைப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்

அதன் பிரகாரம், 2022ஆம் ஆண்டில் சிங்கள புத்தாண்டு பேருந்துச் சேவை வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டதுடன், சிங்கள புத்தாண்டு காலப்பகுதியினுள் (2022.04.08 – 2022.04.13) தேசிய போக்குவரத்து அதிகாரசபையின் முகாமையின் கீழ் காணப்படும் கொழும்பு பெஸ்ரியன் மாவத்தை பேருந்துத் தரிப்பிடத் தொகுதியில் இருந்து மற்றும் அதிவேகப் பாதை பேருந்துச் சேவைகள் செயற்படும் பேருந்து நிலையங்களில் இருந்து வெளியேறிய பேருந்துகளின் பயணத்தடவை எண்ணிக்கை 5,186 ஆகும்.

பேருந்துத் தரிப்பிடத் தொகுதி	பேருந்து பயணத்தடவை எண்ணிக்கை
பெஸ்ரியன் மாவத்தை	4,557
மாகும்புர	309
கடவத்தை	205
கடுவளை	115
மொத்தம்	**5,186**

பேருந்துகளின் தரத்தினைப் பரிசோதனை செய்யும் நிகழ்ச்சிகள் 02 மேற்கொள்ளப்பட்டதுடன், அதன்போது 65 பேருந்துகளின் தரம் குறித்து பரிசோதனை செய்யப்பட்டது. அதில் இனங்காணப்பட்ட உரிய நியமத்திற்கு உட்படாத பேருந்துகள் அச்சந்தர்ப்பத்திலேயே உரிய தரத்திற்கு தயார்படுத்தப்பட்டன.

நிதிசார் முன்னேற்றம்

2022 ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்திற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதியத்தினால் மீண்டெழும் செலவீனங்களின் கீழ் 5.7 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதில் 2.62 மில்லியன் ரூபா 2022.12.31ஆந் திகதியாகையில் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 45.9 வீதமாகும்.

2.03 பேருந்து ஊழியர் குழுவினரை பதிவுசெய்தலும் பயிற்சி அளித்தலும்



தரமிக்க பயணிகள் போக்குவரத்துச் சேவையொன்றினை பொதுமக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன், மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்துகளில் பணிபுரியும் ஊழியர் குழாத்தினருக்கு பல்வேறு துறைகளின் கீழ் தொழிற்சார் பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல் இச்செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

தரமிக்க பயணிகள் போக்குவரத்துச் சேவையொன்றினைப் பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான அறிவு மற்றும் பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல் தொடர்பில் விசேட கவனஞ் செலுத்தப்பட்டதுடன், இப்பயிற்சி செயலமர்வுகள் புதிய அணுகுமுறையுடன் கீழ்வரும் பிரிவுகள் குறித்து கூடுதல் கவனஞ் செலுத்தி செயற்படுத்துவதற்கு 2022ஆம் அண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன் பிரகாரம், இலங்கை பொலிஸ், மகளிர் மற்றும் சிறுவர் பணியகம், தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபை, புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பிலான தேசிய அதிகாரசபை, தேசிய உற்பத்தித்திறன் செயலகம் போன்ற நிறுவனங்களின் அனுபவமிக்க விரிவுரையாளர்களின் பங்குபற்றலுடன், கீழ்வரும் தலைப்புக்களில் விரிவுரைகள் மேற்கொள்ளப்பட்டன.

- வீதி விபத்துக்களைக் குறைத்தல் மற்றும் வீதிச் சட்டதிட்டங்களைப் பின்பற்றுதல்
- தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் நியதிகள்
- வாடிக்கையாளர் கவனிப்பு சேவை வழங்கல் உத்திகள்
- அபாயகர ஒளடதப் பாவனையின் விளைவுகள்
- பேருந்தினுள் பெண்கள் மற்றும் பிள்ளைகளுக்கு எதிரான வன்முறைகளைத் தடுத்தல்
- வாகன விபத்தொன்று ஏற்பட்ட வேளையில் நடந்துகொள்ளும் விதம் மற்றும் முதலுதவிகளை வழங்குதல்

2022ஆம் ஆண்டில் கீழ்வரும் பிரிவுகளின் கீழ் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

- புதிய சாரதிகள் நடத்துனர்களுக்கான பயிற்சி
- ஏற்கனவே பணியில் உள்ள பணிக்குழாத்தினருக்கு மூன்று வருடங்களுக்கு ஒருமுறை பெற்றுக் கொடுக்கும் பயிற்சி
- ஒழுக்காற்று நடவடிக்கைகளில் ஈடுபட்ட சாரதிகள் நடத்துனர்களுக்கான பிரத்தியேகமான பயிற்சி

ஒரு பயிற்சி நிகழ்வில் அதிகபட்சம் 120 பேர் பங்குபற்றலுடன் 45 செயலமர்வுகள் நடாத்தப்பட்டு 5400 நபர்களுக்கான பயிற்சியினை வழங்குவதற்கு 2022ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டது.

அதன் பிரகாரம் 2022.12.31ஆந் திகதியாகையில் 29 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு 3268 சாரதிகள் பேருந்து நடத்துனர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்

இச்செயற்றிட்டத்தில் பயிற்றுவிக்கப்பட்ட சாரதிகள் பேருந்து நடத்துனர்களின் படி பௌதிக முன்னேற்றம் நூற்றுக்கு 42 வீதமாவதுடன் நடாத்தப்பட்ட பயிந்சி செயலமர்வுகளின் எண்ணிக்கைப் படி நூற்றுக்கு 50 வீதமாகும்.

2022ஆம் ஆண்டில் 45 பயிற்சி நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டிருந்த போதும் 2022ஆம் ஆண்டின் நடுப்பகுதியாகையில் நாட்டினுள் உக்கிரமடைந்த நிதி நெருக்கடி காரணமாக 29 நிகழ்ச்சிகளையே முடிவுறுத்த முடிந்தது. இந்நிலைமையின் விளைவாக, அச்சிடலிற்குத் தேவையான அடையாள அட்டை அச்சிடுவதற்கான பிளாஸ்ரிக் அட்டைகள், அச்சிடலிற்கான மை, அச்சிடலிற்குத் தேவையான 'இலமினேட்டிங்' உட்பட்ட எல்லா காகிதாதிகளின் விலை 300%ஆலும் உணவு பானவகைகளின் விலை குறிப்பிடத்தக்களவிலான வீதத்தினாலும் அதிகரித்தமையால் சாரதிகள், நடத்துனர்களைப் பதிவுசெய்தல் மற்றும் பயிற்சியளித்தல் செயற்றிட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியம் போதியதாக இல்லாமையால் 29 நிகழ்ச்சிகளை மாத்திரம் நடாத்த வேண்டி ஏற்பட்டது.

நிதிசார் முன்னேற்றம்

2022ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்திற்காக மீண்டெழும் செயற்றிட்டங்களின் கீழ் 4.7 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதில் 2022.12.31ஆந் திகதியாகையில் 4.63 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2022ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 98.5 வீதமாகும்.

2.04 போக்குவரத்துக் கேள்வி மற்றும் சேவை தர ஆய்வு

பொதுமக்களின் பயணிகள் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, ஏற்றுக்கொள்ளக்கூடிய தரமான பேருநதுச் சேவைகள் உள்ளனவா என்பதை மதிப்பாய்வு செய்தல் மற்றும் அச்சேவைகளைப் பேணவேண்டிய குறைந்தபட்ச மட்டத்தினைத் தீர்மானித்தல் என்பன 1991 இல 37ஐக் கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.





அதன்படி பொதுமக்களின் தேவைகளின் பிரகாரம் நம்பிக்கைமிகு, தரமிக்க, வசதிமிக்க பொதுப் போக்குவரத்து பேருந்துச் சேவையொன்றினை, செலுத்த இயலுமான கட்டணத்தில் வழங்குவதற்கு தேவையான தரவுகளைச் சேகரித்தல் மற்றும் அத்தரவுகளைப் பகுப்பாய்வு செய்து தீர்மானங்களை எடுப்பதற்கு உரிய தரப்பினருக்கு அனுப்புதல் இச்செயற்றிட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

கீழ்வரும் விடயங்களில் கூடிய அவதானத்தைச் செலுத்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

- பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை இனங்காணுதல் மற்றும் அதன்படி புதிய பேருந்துச் சேவைகளை ஆரம்பிப்பதற்கு வீடு வீடாகப் போய் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் (Household Survey)

- தற்போதுள்ள பேருந்துச் சேவைகளின் இயக்க நேர அட்டவணையினைத் தயாரித்தல் மற்றும் திருத்துதல் ஆகியவற்றிற்கு மேற்கொள்ளப்படும் பயணிகள் கேள்வி ஆய்வுகள் (Passenger Demand Survey)

- தற்போதுள்ள பேருந்துச் சேவைகளின் தரம் தொடர்பில் பொதுமக்களின் திருப்தித்தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் மற்றும் அதன் பிரகாரம் பொதுமக்கள் எதிர்பார்க்கும் தரமிக்க பேருந்துச் சேவையினை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் பயணிகளின் கருத்துக் கணிப்பு ஆய்வுகள் (Passenger Interview Survey)

- பேருந்துகளின் இயங்கும் நேரத்தினை நிர்ணயிப்பதற்கு மேற்கொள்ளப்படும் பயணநேர கணக்கெடுப்பு (Travel Time Survey)

பௌதிக முன்னேற்றம்

2022ஆம் ஆண்டில் 17 ஆய்வுகளை மேற்கொள்ள திட்டமிட்ட போதிலும், 2022ஆம் ஆண்டில் ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடி காரணமாக பேருந்து தொடர்ச்சியாக இயங்காமை, செயற்றிட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிகளைச் செலவிடுதலை மட்டுப்படுத்தல் போன்ற காரணங்களால் அத்தியாவசியமான ஆய்வுகளை மாத்திரம் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டதால் 2022.12.31ஆந் திகதியாகையால் 14 ஆய்வுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டன.

அதன் கீழ் கண்டி – குருணாகலை பாதையில் பயணிகள் கேள்வி தொடர்பில் ஒரு ஆய்வும், சிசு செரிய செயற்றிட்டத்தின் கீழ் 3 ஆய்வுகளும் ஹைலெவல் மற்றும் லோலெவல் பாதைகளில் இயங்கும் பேருந்துகளின் இயக்கக் காலம் தொடர்பில் 5 ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக, காலி வீதியில் "பேருந்து முன்னுரிமைப் பாதை" (Bus Priority Lane) அறிமுகப்படுத்தல் தொடர்பில் ஒரு ஆய்வும் கட்டுபெத்த, பிலியந்தலைவ, கடவத்தை, மாகும்புர ஆகிய இடங்களில் "Park & Ride" அறிமுகப்படுத்தல் தொடர்பில் ஒரு ஆய்வும் மேற்கொள்ளப்பட்டன.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிரந்தர மற்றும் தற்காலிய அனுமதிப்பத்திரங்களின் கீழ் அதிவேகப் பாதைகளில் இயங்கும் எல்லா பேருந்துகளிலும் பயணிகள் கொள்ளளவினை இனங்காணுதல் தொடர்பில் வார நாட்கள் ஐந்தும் உள்ளடங்குமாறு ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டதுடன், இதன் மூலம், இயக்கத்தில் உள்ள பேருந்துகளின் கொள்ளளவினை இனங்காணுதலும் அதன் படி தொழில்நுட்ப மதிப்பாய்வு அறவீட்டிற்கான சரிசெய்யப்பட வேண்டிய தகவல்களைத் தீர்மானித்லும் நேர அட்டவணைகளில் ஏற்படுத்தவேண்டிய மாற்றங்களை இனங்கண்டு நேர அட்டவணைகளை இற்றைப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டன. மேலும், கொழும்பு – பதுளை மற்றும் அதற்கு இணைவான பாதைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக பாணந்துறை – மாத்தறை அதிவேகப் பாதை பேருந்துகளில் பயணிகள் கொள்ளளவு தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

நிதிசார் முன்னேற்றம்

2022 ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்திற்காக மீண்டெழும் செயற்றிட்டங்களின் கீழ் 5.0 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதில் 2.57 மில்லியன் ரூபா 2022.12.31ஆந் திகதியாகையில் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 51.4 வீதமாகும்.

2.05 தூரப் பயணச் சேவை சமிக்ஞைப் பலகைகள்





மாகாணங்களுக்கு இடையிலான தூரப்பயணச் சேவை பேருந்துகள் எல்லா பேருந்துத் தரிப்பிடங்களிலும் நிறுத்தி குறுகிய தூரப் பயணிகளையும் ஏற்றிச் செல்வதால் மாகாணத்தினுள் ஓடும் குறுகிய தூரம் ஓடும் பேருந்துச் சேவைகளுடன் ஏற்படுத்திக்கொள்ளும் பாதகமான போட்டியினைத் தடுப்பதற்கு தூரப் பயணச் சேவை பேருந்துகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட நிறுத்தும் இடங்களை அறிமுகப்படுத்தல் இச்செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். 2019.06.18ஆந் திகதியிட்ட இல 2128/9 கொண்ட வர்த்தமானிப் பத்திரிகை மூலம் இப்புதிய சமிக்ஞை பிரசுரிக்கப்பட்டது.

பௌதிக முன்னேற்றம்

வீதி அபிவிருத்தி அதிகார சபை, கொழும்பு மாநகர சபை, இலங்கை போலிசின், உரிய மாகாணப் போக்குவரத்து அதிகார சபை ஆகிய நிறுவனங்களைக் கொண்ட கமிட்டி மூலம் பௌதிக ரீதியாகப் பரிசீலித்து மட்டுப்படுத்தப்பட்ட நிறுத்தும் சமிக்ஞைப் பலகைகளைப் பொருத்த வேண்டிய இடங்கள் குறிப்பாக இனங்காணப்படும்.

கொழும்பிற்குள் பிரவேசிக்கும் 05 பிரதான பிரவேசப் பாதைகளை உள்ளடக்குவதாக மட்டுப்படுத்தப்பட்ட நிறுத்தும் சமிக்ஞைப் பலகைகளைப் பொருத்துவதற்கு 2022ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டது. அதன் பிரகாரம், கொழும்பு – கதிர்காமம், கொழும்பு – எம்பிலிபிட்டிய (கீழ்பாதை Low Level மற்றும் மேல் பாதை High Level உள்ளடங்குமாறு) மற்றும் கொழும்பு – அம்பாறை, கொழும்பு – யாழ்ப்பாணம், கொழும்பு – மட்டக்களப்பு வரையிலான மட்டுப்படுத்தப்பட்ட நிறுத்தும் இட சமிக்ஞைப் பலகைகளைப் பொருத்தவேண்டிய இடங்கள் குறித்து தகவல்கள் பெறப்பட்டன. எனினும், அதற்கிடையில் ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடியைக் காரணமாகக் கொண்டு அலுவலகச் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டமையால் ஹங்வெல்லை – கிரிந்திவெல பாதையில் 10 சமிக்ஞைப் பலகைகளும், கொழும்பு - கதிர்காமம் பாதையில் பெந்தரை பாலம் முதல் மாகொல்ல வரை 32 சமிக்ஞைப் பலகைகளும் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், கொழும்பு முதல் அளுத்காமம் வரை 42 சமிக்ஞைப் பலகைகளைப் பொருத்துதல், மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை மூலம் மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளது. பெந்தரை – கதிர்காமம் பாதையில் மகமோதர முதல் கதிர்காமம் வரை 85 சமிக்ஞைப் பலகைகள் உட்பட இவ்வருடத்தினுள் 300 சமிக்ஞைப் பலகைகளைப் பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கை இல 03/2022 மற்றும் அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை இல 04/2022 இன் பிரகாரம் இச்செயற்றிட்டத்தின் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன.

நிதிசார் முன்னேற்றம்

இச்செயற்றிட்டத்திற்காக 2022 ஆம் ஆண்டின் தேசிய போக்குவரத்து அதிகாரசபை நிதியத்தினால் மீண்டெழும் செயற்றிட்டங்களின் கீழ் 5.0 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதில் 0.82 மில்லியன் ரூபா 2022.12.31ஆந் திகதியாகையில் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 16.4 வீதமாகும்.

2.06 இபோச மற்றும் தனியார் பேருந்துகளுக்கான ஒன்றிணைக்கப்பட்ட நேர அட்டவணைகளைத் தயாரித்தல்

2005 இல 27 கொண்ட இலங்கைப் போக்குவரத்துச் சபை சட்டத்தினால் திருத்தஞ் செய்யப்பட்ட 1991 இல 37 கொண்ட தேசிய போக்குவரத்து அதிகார சபை சட்டத்தின் பிரகாரம் "அறிவியல் ரீதியாக தீர்மானிக்கப்படும் பொது நேர அட்டவணையொன்றின் கீழ் உண்மையிலேயே பயணிகள் கேள்வியினைப் பூர்த்தி செய்வதற்கு அனுபவமிக்க பேருந்துச் சேவையொன்று அல்லது தனியார் பேருந்துச் சேவையொன்றினைப் பெற்றுக் கொள்ளல்" என்பதை நோக்காகக் கொண்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகளுக்கு பொது நேர அட்டவணை தயார் செய்யப்படும்.

பேருந்துகளுக்கு இடையில் காணப்படும் பாதகமான போட்டியினைக் குறைத்து ஒவ்வொரு தரப்பினரிற்கும் குறிப்பிட்ட சந்தைப் பங்கினை ஓதுக்கிக் கொடுத்தல் மூலம் சாதகமான போட்டித்தன்மையினை ஏற்படுத்தி பொதுமக்களுக்கு நம்பிக்கைமிகு, பாதுகாப்பான, வசதிமிக்க பேருந்துச் சேவையொன்றினை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

பௌதிக முன்னேற்றம்

மேல் மாகாணத்தில் இருந்து ஆரம்பமாகும் எல்லா மாகாணங்களுக்கு இடையிலான பாதைகளிற்கு ஒன்றிணைந்த நேர அட்டவணைகளைத் தயாரித்து முடித்தல் 2022ஆம் ஆண்டின் இலக்காக இருந்தது.

அதன் பிரகாரம், 2022.12.31 புதிய 24 நேர அட்டவணைகள் மற்றும் 71 நேர அட்டவணைத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், நாட்டினுள் நிலவிய எரிபொருள் நெருக்கடி காரணமாக எரிபொருள் போதியளவு கிடைக்காமையால் பேருந்துகளின் இயக்கம் தடைபட்டமையால் நேர அட்டவணையின் பிரகாரம் பேருந்துகள் புறப்படுதலும் நடைபெறாததுடன், பயணிகள் தேவைகளை வழங்குவதற்காக எரிபொருள் கிடைக்கப்பெறும் பேருந்துகள் மாத்திரம் சேவையில் ஈடுபட நேரிட்டது. அதனால் இவ்வருடத்தில் திட்டமிடப்பட்ட இலக்கினை நோக்கிச் செல்வதற்கு முடியாமலாயிற்று.

நிதிசார் முன்னேற்றம்

2022 ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்திற்காக மீண்டெழும் செயற்றிட்டங்களின் கீழ் 0.2 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதில் 0.03 மில்லியன் ரூபா 2022.12.31ஆந் திகதியாகையில் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 15 வீதமாகும்.

2.07 பேருந்துக் கட்டணத் திருத்தம் மற்றும் கட்டண ஒழுங்கீனங்களை நீக்குதல்

2002 ஆம் ஆண்டு முதல் அமுலில் உள்ள பேருந்துக் கட்டணக் கொள்கையின் பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வருடாந்தம் பேருந்துக் கட்டணங்களை நிர்ணயித்தல் மேற்கொள்ளப்படுகின்றது. இக்கட்டணக் கொள்கையின் பிரகாரம், பேருந்துக் கட்டணங்களை நிர்ணயித்தல் ஆகுசெலவு காரணிகளின் பிரகாரம் பேருந்துக் கட்டணங்களைத் திருத்தஞ்செய்ய வேண்டும் எனக் கருதினால், ஒவ்வொரு வருடமும் யூலை மாதம் 01ஆந் திகதியன்று பேருந்துக் கட்டணத் திருத்தியமைத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அதற்கு மேலதிகமாக எரிபொருள் விலை, மொத்த 01 கி.மீற்றரின் ஆகுசெலவு 4% அல்லது அதற்கு மேல் அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் மாகாணத்திற்குள்ளேயான பேருந்துக் கட்டணம் திருத்தி அமைக்கப்படும்.

பௌதிக முன்னேற்றம்

இச்செயற்றிட்டத்தின் கீழ் வருடாந்தம் பேருந்துக் கட்டணங்களைத் திருத்தியமைத்தல், ஏற்கனவே அமுலில் உள்ள பேருந்துக் கட்டண கொள்கை தற்காலத்திற்குப் பொருந்தும் விதத்தில் இற்றைப்படுத்துதல் என்பன 2022ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டன.

2022ஆம் ஆண்டில் எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக பல சந்தர்ப்பங்களில் இடைக்கால பேருந்துக் கட்டணத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. 2022.01.05, 2022.03.14, 2022.04.19, 2022.05.25

ஆகிய திகதிகளில் முறையே 17.44%, 15%, 35%, 19.49% ஆகப் பேருந்துக் கட்டணங்கள் திருத்தியமைக்கப்பட்டன.

2022.07.01 வருடாந்த பேருந்துக் கட்டணத் திருத்தம் செயற்படுத்தப்பட்டதுடன், பேருந்துக் கட்டண அதிகரிப்பின் சதவீதம் 22% ஆகும். அதன் பின்னர், அரசாங்கத்தினால் மீண்டும் எரிபொருள் விலைத் திருத்தம் இரண்டு சந்தர்ப்பங்களில் மேற்கொண்டதன் காரணமாக, 2022.07.20 மற்றும் 2022.08.05 ஆகிய திகதிகளில் முறையே -2.23% மற்றும் -11.14% ஆல் இடைக்கால பேருந்துக் கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

எரிபொருள் நெருக்கடி காரணத்தினால் பேருந்துகள் குறிப்பிட்டபடி இயங்காமை காரணமாக பேருந்துக் கட்டணக் கொள்கைத் திருத்தத்திற்கு ஏற்பாடாகியிருந்த ஆய்வுகளை இவ்வருடத்திலும் மேற்கொள்ள முடியாமையால் பேருந்துக் கட்டணக் கொள்கைத் திருத்தஞ் செய்தல் இவ்வருடத்திலும் மேற்கொண்டு செயற்படுத்த இயலவில்லை.

நிதிசார் முன்னேற்றம்

2022 ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்திற்காக மீண்டெழும் செயற்றிட்டங்களின் கீழ் 2.0 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதில் 0.64 மில்லியன் ரூபா 2022.12.31ஆந் திகதியாகையில் இச்செயற்றிட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 32.0 வீதமாகும்.

2.08 போக்குவரத்துடன் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சி

தரமான பயணிகள் போக்குவரத்துச் சேவையொன்றினை நிறுவுவதற்கு தேவையான சூழலைத் தயார்படுத்தும் நோக்குடன் கீழ்வரும் 8 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாடு முழுதும் மாகாணங்களை மையமாகக் கொண்டு தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் நடாத்துவதற்கு 2022ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளது.

- வீதிப் பாதுகாப்பு தொடர்பில் பாடசாலை மாணவர்களை அறிவுறுத்துதல்
- போக்குவரத்துத் திட்டமிடல்
- நேர அட்டவணைகளைத் தயாரித்தல்
- அலுவலக முறைமைகள் குறித்து மாகாணப் போக்குவரத்து அதிகார சபைகளின் உத்தியோகத்தர்களை அறிவுறுத்துதல்
- பேருந்து இயக்கம், பயணிகள் சேவை அனுமதிப்பத்திர நிபந்தனைகள், பணிக்குழாத்தினர் முகாமை தொடர்பில் பேருந்து ஓட்டுனர்களை அறிவுறுத்துதல்
- பயணிகள் உரிமை தொடர்பில் பயணிகளை மற்றும் பேருந்துச் சாரதிகள் நடத்துனர்களை அறிவுறுத்துதல்
- GPS தொழில்நுட்பத்தின் ஊடாக கட்டுப்பாட்டுக் கூடத்தின் மூலம் பரிசீலிக்கப்பட்டு குறிக்கப்பட்ட வேக வரையறைகளை மீறியவாறு அதிக வேகமாக ஓட்டிய பேருந்துகளின் சாரதிகளையும் மற்றும் உரிமையாளர்களையும் அறிவூட்டுதல்

பௌதிக முன்னேற்றம்

இவ்வருடத்தினுள் நிலவிய எரிபொருள் நெருக்கடி காரணமாக மக்களை ஒன்று கூட்டுவதற்று தடைகள் ஏற்பட்டமையால், பயணிகள் உரிமைகள் தொடர்பில் பயணிகள் மற்றும் பேருந்துச் சாரதிகள் நடத்துனர்களை அறிவூட்டுதல் மற்றும் அதிக வேகமாக ஓட்டிய பேருந்துகளின் சாரதிகளையும் மற்றும் உரிமையாளர்களையும் அறிவூட்டுதல் நிகழ்ச்சிகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் பிரகாரம் 2022.12.31ஆந் திகதியாகையில் 05 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. அதன் படி செயற்றிட்டத்தின் பௌதிக முன்னேற்றம் நூற்றுக்கு 62.5 ஆகும்.




நிதிசார் முன்னேற்றம்

இச்செயற்றிட்டத்திற்காக 2022 ஆம் ஆண்டில் 1.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதில் 0.63 மில்லியன் ரூபா 2022.12.31ஆந் திகதியாகையில் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 42 வீதமாகும்.

2.09 பொதுப் போக்குவரத்து பேருந்துத் துறைக்கு நவீன தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துதல்

பொதுமக்களுக்கு வழங்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் சேவைகளை மிகவும் வினைத்திறன்மிக்கதாக மற்றும் விளைபயன்மிக்கதாக மேற்கொள்வதற்கும் பயணிக்கும் மக்களுக்கு நம்பிக்கைமிகு, தரமிக்க, வசதிமிக்க பொதுப் போக்குவரத்துப் பேருந்துச் சேவையொன்றினை வழங்குவதற்கும் நாளுக்கு நாள் பொதுப் போக்குவரத்து பேருந்துகளில் இருந்து விலகிச் செல்லும் பயணிக்கும் மக்களை மீண்டும் பொதுப் போக்குவரத்து பேருந்துச் சேவையின் பால் ஈர்த்துக் கொள்வதற்கும் அலுவலக நடவடிக்கைகளுக்காக மற்றும் பொதுப் போக்குவரத்து பேருந்துகளுக்காக புதிய தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துவதற்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் 2022ஆம் ஆண்டின் போது விசேட கவனஞ் செலுத்தப்பட்டு செயற்றிட்டங்கள் பல செயற்படுத்தப்பட்டன.

- **<u>தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தன்னியக்கமயப்படுத்தல் செயற்றிட்டம்</u>**




தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் நிறுவனத்தின் வன்பொருள் மற்றும் மென்பொருள் தொகுதியினை அபிவிருத்தி செய்தல், நிறுவுதல் மற்றும் அலுவலகப் பணிகளை எளிதாக்கிக் கொள்வதற்குத் தேவையான தொழில்நுட்பத் தலையீட்டினை மேற்கொள்ளுதல் என்பன பிரதான காரியங்களாகும். இத்தகவல் தொழில்நுட்பப் பிரிவின் ஊடாக செயற்படுத்தப்படும் செயற்றிட்டங்கள் பல உள்ளதுடன், அச்செயற்றிட்டங்களின் 2022ஆம் ஆண்டின் முன்னேற்றம் பின்வருமாறு.

நிறுவனச் செயற்பாடுகளை தன்னியக்கமயப்படுத்தல் செயற்றிட்டம்





அலுவலகச் செயற்பாடுகளைத் தன்னியக்கமயப்படுத்தலை கணினி மென்பொருள் ஒன்றின் ஊடாக மேற்கொள்ளுதல் இச்செயற்றிட்டத்தின் நோக்கமாகும். இச்செயற்றிட்டத்தின் போது நிறுவனத்தில் காணப்படும் இயக்கம், திட்டமிடல், தரப் பாதுகாப்பு ஆகிய திணைக்களங்களில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை இனங்கண்டு அச்செயற்பாடுகளை தன்னியக்கமயப்படுத்தல் 03 பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் மூலம் பொதுமக்களுக்கு துரித சேவையொன்றினைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நிறுவனத்தின் கோப்புக்களை மின்னணு முறைமை ஊடாக மேற்கொள்வதன் மூலம் நம்பிக்கைமிகு பாதுகாப்புமிக்க வினைத்திறன்மிக்க முறைமையொன்றினை நிறுவுவதும் இச்செயற்றிட்டத்தின் நோக்கமாகும்.

இந்த ஒவ்வொரு தொகுதியும் செயற்படும் போது இத்தொகுதிகள் ஊடாக செயற்பாடுகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களை இச்செயற்றிட்டத்திற்கு இசைவாக்கஞ் செய்தல் மற்றும் பயனர்களுக்கு வசதிமிக்கதாக அத்தொகுதிகளைக் கையள்வதற்கு தேவையான பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல் இச்செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. 2022ஆம் ஆண்டில் இந்த மென்பொருளினை மிகவும் சீராகப் பயன்படுத்துவதற்கு தேவையான அவ்வத் திணைக்களங்களினால் கோரியுள்ள திருத்தங்கள் மேற்கொள்வதற்கு கூடிய காலம் எடுத்தது. அவ்வாறே பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்திற்குப் பதிலாக NFC அட்டையொன்றை வெளியிடுவதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு இருந்ததுடன், அதனை மேலும் செயற்படுத்துவதற்கு தேவையான பின்னணி நிர்மாணிக்கப்பட்டது. 2022ஆம் ஆண்டில் இம்மென்பொருளைச் செயற்படுத்தும் போது ஏற்படும் சிக்கல் நிலைமைகளைப் புரிந்து கொண்டு அச்செயற்பாடுகளை மிகவும் சீரானதாக மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் படி, நிறுவனத்தினைத் தன்னியக்கமயமாக்கல் செயற்பாட்டின் முதல் கட்டம் நிறைவடைந்து உள்ளதுடன், நடைமுறைப்படுத்தும் போது இனங்காணப்பட்ட சிறு மாற்றங்கள் மேலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் இரண்டாவது கட்ட துணை செயன்முறைத் தொகுதியினை அபிவிருத்தி செய்தலை ஆரம்பித்தல் ஆய்வில் உள்ளது.

- **கூகள் தொழில்நுட்பத்தின் ஊடாக பொதுப் போக்குவரத்துத் தரவு விபரக்குறிப்பினை அறிமுகப்படுத்துதல் (GTFS)**

கூகள் வரைபடத்தினுள் பொதுப் போக்குவரத்துத் தரவு விபரக்குறிப்பினை உட்படுத்துதல் 2019ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன், அச்செயற்றிட்டத்தின் இன்னொரு நீட்டிப்பாக எல்லா மாகாணப் போக்குவரத்து அதிகாரச் சபைகளினதும் பேருந்துப் பயணப்பாதைகள் இச்செயற்றிட்டத்தினுள் உட்புகுத்துவதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், மேல் மாகாண போக்குவரத்து அதிகார சபைக்கு உட்பட்ட 259 பாதைகளும் தென் மாகாண போக்குவரத்து அதிகார சபைக்கு உட்பட்ட 117 பாதைகள் மற்றும் இபோச மற்றும் புகையிரதப் பாதைகள் தகவல்களும் கூகள் வரைபடத்தினுள் உட்படுத்தப்பட்டன.

2022ஆம் ஆண்டு பிற்பகுதியில் நிகழ்நேரத் தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு (GTFS-real-time) உரிய அபிவிருத்தி நடவடிக்கைகள் United Nations Development Programme நிறுவனத்தின் அனுசரணையுடன் மேற்கொள்வதற்கு ஆரம்பிக்கப்பட்டதுடன், அதன் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



- **நிகழ்நிலை முறையில் பேருந்துகளில் ஆசனங்களை ஒதுக்கும் செயற்றிட்டம்**

இத்தொகுதியின் மூலம் ஆசன ஒதுக்கீடு மேற்கொள்ளும் போது கொடுப்பனவு செய்யும் ஊடகங்களை மேலும் அபிவிருத்தி செய்து தொகுதியினை மேம்படுத்துவதற்கும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நிறுவனமொன்றைத் தெரிவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் 2022.12.31.ஆந் திகதியாகையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பொதுப் போக்குவரத்து பேருந்துத் துறைக்கான நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றம்

இச்செயற்றிட்டத்திற்காக 2022 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 7.3 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதில் 2.82 மில்லியன் ரூபா 2022.12.31ஆந் திகதியாகையில் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 38.6 வீதமாகும்.

2.10 பேருந்துகளில் GPS பொருத்துதல்



2022ஆம் ஆண்டில் 232 GPS சிம் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், 73 பேருந்துகளில் GPS உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. அதன்படி, ஒட்டுமொத்தமாக, 2022.12.31ஆந் திகதியாகையில் GPS அலகின் ஊடாக 1,365 பேருந்துகள் முறைப்படுத்தப்படுவதுடன், மொத்த மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகளில் 44%இற்கு GPS உபகரணம் பொருத்தப்பட்டுள்ளது. MyBusSL நடமாடும் செயலி ஊடாக GPS பொருத்தப்பட்டுள்ள எல்லா பேருந்துகளும் தொடர்பில் நேரடித் தகவல்களைப் பேருந்துப் பயணிகளால் பார்த்துக்கொள்ளும் வசதி பெற்றுக் கொடுக்கப்பட்டது.


சேவை வகை	பேருந்துகளின் எண்ணிக்கை	GPS பொருத்தப்பட்டுள்ள எண்ணிக்கை
அதி சொகுசு	169	146
சொகுசு	560	510
அரை சொகுசு	438	331
சாதாரண	1945	378
மொத்தம்	3112	1365

மூலம்- தரப் பாதுகாப்பு மற்றும் வெளித் தொடர்புகள் திணைக்களம், தேபோஆ

நிதிசார் முன்னேற்றம்

இச்செயற்றிட்டத்திற்காக 2022 ஆம் ஆண்டில் 6 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதில் 8.10 மில்லியன் ரூபா 2022.12.31ஆந் திகதியாகையில் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 100 வீதத்தினையும் விஞ்சியுள்ளது.

2.11 பிரீபெய்ட் அட்டை முறை (Electronic Fare Collection)







எந்தவொரு பேருந்திலும் பயன்படுத்த முடியுமான ஈ-ரிக்கெட் முறையொன்றை (e-Ticketing System) 2021ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டது. அதன் படி நடவடிக்கை மேற்கொள்வதற்காக, இலங்கை மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய அட்டைத் திட்டத்தின் கீழ் போக்குவரத்தின் போது பயன்படுத்துவதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட இணைய வழி மூலமான பிரீபெய்ட் அட்டையொன்றினைச் செயற்படுத்துவதற்குத் தேவையான Backend மென்பொருளைத் தயாரிப்பதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் முறையான பெறுகை நடவடிக்கையொன்றின் கீழ் பொருத்தமான நிறுவனமொன்றினைத் தெரிவுசெயது 2022ஆம் ஆண்டில் உரிய மென்பொருள் அபிவிருத்தி செய்யப்பட்டது. அதன் செயற்பாடு நடைபெறும் விதம் குறித்து பரிசீலிப்பதற்காக முன்னோடிச் செயற்றிட்டமொன்றாக காலி- மாகும்புர அதிவேகப் பாதையில் தனியார் பேருந்துகளில் இந்த இலங்கை பிரீபெய்ட் அட்டை செயற்படுத்தப்பட்டதுடன், இத்தொகுதியின் துல்லியத்தன்மை குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. மேலும், இம்மென்பொருளின் ஊடாக இலங்கை பிரீபெய்ட் அட்டைக்கு மேலதிகமாக தற்போது பாவனையில் இருக்கும் ஏனைய தொழில்நுட்ப முறைகள் (QR குறியீட்டு முறை, VISA & Master அட்டைப் பாவனை, Virtual card பாவனை) ஊடாக ஈ-நுழைவுச்சீட்டுக்களை வழங்கும் இயலுமை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.


நிதிசார் முன்னேற்றம்

இச்செயற்றிட்டத்திற்காக 2022 ஆம் ஆண்டில் 7 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதில் 0.012 மில்லியன் ரூபா 2022.12.31ஆந் திகதியாகையில் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 0.17 வீதமாகும்.

2.12 தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை தயாரித்தல்







இலங்கை மத்திய வங்கி, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கைப் போக்குவரத்துச் சபை, இலங்கைப் புகையிரதத் திணைக்களம், மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், இலங்கை துறைமுக அதிகாரசபை, தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் உட்பட போக்குவரத்துடன் தொடர்புடைய நிறுவனமாகிய CILT நிறுவனம் ஆகிய பல நிறுவனங்களிடம் இருந்து தகவல்கள் மற்றும் தரவுகளை ஒன்றுசேர்த்து அத்தரவுகளைப் பகுப்பாய்வு செய்து மிகவும் கவர்ச்சிகரமாகத் தயாரிக்கப்படும் 'தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை' தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் அச்சிடப்பட்ட நூலாக மும்மொழிகளிலும் வெளியிடப்படுகின்றது.

போக்குவரத்து குறித்து ஆய்வு செய்யும், திட்டங்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள் மற்றும் நிபுணர்களுக்கும் போக்குவரத்து தொடர்பில் கற்கை நெறிகளை மேற்கொள்வோருக்கும் தரை மார்க்கம், நீர் மார்க்கம், ஆகாய மார்க்கம் ஆகிய மூன்று ஊடகங்களினூடாக மேற்கொள்ளப்படும் போக்குவரத்து நடவடிக்கைகள் தொடர்பிலான தகவல்களை ஒரே இடத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் ஊடகமொன்றாக இவ்வறிக்கையினை உசாவுவதற்கு இயலும்.

பௌதிக முன்னேற்றம்

போக்குவரத்துப் புள்ளிவிபர அறிக்கையின் 2020/2021 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கான அறிக்கையை அறிக்கையொன்றாகத் தயாரித்து இணையத்தளத்தின் ஊடாக வெளியிடுவதற்கும் 2022 அறிக்கையின் தரவுகளைச் சேகரித்தல் முதல் ஏனைய எல்லா பணிகளையும் முடிவுறுத்தி இணையத்தளத்தின் ஊடாக வெளியிடுவதற்கும் 2022ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டது. அதன் பிரகாரம், 2020/21 அறிக்கை 2022ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதத்தில் வெளியிடப்பட்டதுடன் 2022.12.31ஆந் திகதியாகையில் 2022 அறிக்கையினை இணையத்தளத்தின் ஊடாக வெளியிடுதல் மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம், 2022ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் பௌதி முன்னேற்றம் நூற்றுக்கு 100 வீதமாகும்.

நிதிசார் முன்னேற்றம்


2022 ஆம் ஆண்டில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதியத்தினால் மீண்டெழும் செயற்றிட்டங்களின் கீழ் 3.3 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட போதிலும், நாட்டினுள் உக்கிரமடைந்த பொருளாதார நெருக்கடி காரணமாக அறிக்கையினை அச்சிடுதல் இடைநிறுத்தப்பட்டது. அதனால் 2022.12.31ஆந் திகதியாகையில் 0.085 மில்லியன் ரூபா அதாவது ஒதுக்கப்பட்ட தொகையில் நூற்றுக்கு 1.45 வீதம் செலவிடப்பட்டிருந்தது.

2.13 நகரப் போக்குவரத்துத் திட்டமிடல்

கொழும்பு நகரைச் சுற்றிக் காணப்படும் கடும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு வசதியான, பாதுகாப்புமிக்க, சுகாதாரப் பாதுகாப்புமிக்க பொதுப் போக்குவரத்துப் பேருந்துச் சேவையொன்றிகைச் செயற்படுத்துவதன் மூலம் அலுவலக வேளைகளில் (Peak hours) கொழும்பு நகரம் மற்றும் சனநெருக்கடிமிக்க நகரங்கள் நோக்கி தனியார் வாகனங்களின் (மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மோட்டார் வண்டிகள்) எண்ணிக்கையினைக் குறைத்தல் இச்செயற்றிட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்படுவதுடன், இதன் கீழ்

- Park and Ride/Car Pooling முறையினை செயற்படுத்தும் திட்டங்களைத் தயாரித்தல்
- பேருந்து முன்னுரிமைப் பாதைகளை (BPL) அறிமுகப்படுத்துதல்
- பேருந்துப் போக்குவரத்தமைப்பினை மறுசீரமைத்தல் அறிக்கையொன்றினைத் தயாரித்தல்

ஆகிய செயற்றிட்டங்களைச் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.



பௌதிக முன்னேற்றம்

- Park and Ride / Car Pooling முறையினை செயற்படுத்துவதற்கான திட்டங்களைத் தயாரித்தல்

நகர வாகன நெருக்கடியினைக் குறைப்பதற்காக Vehicle Sharing (Carpooling) முறையினை அறிமுகப்படுத்துவதற்கு Concept paper தயார் செய்து பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்றதன் பின்னர் பெறுகை நடவடிக்கைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

- பேருந்து முன்னுரிமைப் பாதைகளை (BPL) அறிமுகப்படுத்துதல்

காலி வீதியில் BPL செயற்படுத்துவதற்கு உரிய தரப்பினர்களின் பங்களிப்புடன் கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டது. அதன் பிரகாரம் வெள்ளவத்தை முதல் கொள்ளுப்பிட்டி வரை பாதையில் தடுப்புகளை அகற்றுதல் மேற்கொள்ளப்பட்டது.

நிதிசார் முன்னேற்றம்

2022 ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்திற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நிதியத்தால் மீண்டெழும் செயற்றிட்டங்களின் கீழ் 1 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதில் 0.002 மில்லியன் ரூபா 2022.12.31ஆந் திகதியாகையில் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 0.2 வீதமாகும்.

2.14 நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் நவீனமயப்படுத்துதல்

மூலதனச் செயற்றிட்டத்தின் கீழ் இச்செயற்றிட்டத்தின் மூலம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்குரிய கட்டடங்களை நவீனமயப்படுத்துதல், பராமரிப்பு மற்றும் பேருந்துத் தரிப்பிடப் பராமரிப்பு மேற்கொள்ளப்படும்.

பௌதிக முன்னேற்றம்

2022ஆம் ஆண்டிற்கு திட்டமிடப்பட்டிருந்த பிரதான கட்டடங்களின் சீர்த்திருத்தங்களில் சிறிய பகுதியொன்று மாத்திரம் மேற்கொள்ளப்பட்டதுடன், தேசிய வரவுசெலவுதிட்ட சுற்றறிக்கை இல 03/2022 மற்றும் அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இல 04/2022 மூலம் அறிவித்துள்ளவாறு மூலதனச் செலவீனங்கள் மற்றும் செயற்றிட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

நிதிசார் முன்னேற்றம்

2022 ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்திற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நிதியத்தால் மூலதனச் செயற்றிட்டங்களின் கீழ் 3 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதில் இச்செயற்றிட்டத்திற்காக 2022.12.31ஆந் திகதியாகையில் 0.60 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 20 வீதமாகும்.



செயற்றிட்டங்கள் அல்லாத பணிகள

- **பொதுமக்கள் முறைபாடுகள்**

தரமான பயணிகள் போக்குவரத்தொன்றினை பயணிக்கும் மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு பொதுப் போக்குவரத்துச் சேவையின் நடத்தையினை மிகவும் உன்னிப்பாகக் கண்காணிக்கக்கூடிய ஊடகம் ஒன்றாக இச்சேவைகளைப் பெறும் பொதுமக்களின் பின்னூட்டம் மிகவும் முக்கியமாகும்.



அதன் படி பேருந்துகளில் பயணிக்கும் பயணிகள் அவர்கள் பெற்றுக்கொண்ட சேவை தொடர்பில் அப்பேருந்துகளின் ஊழியர் குழுவினரின் நடத்தை குறித்து யாதாயினும் சிக்கல்மிகு நிலை ஏற்படின் அது தொடர்பில் முறைபாடு செய்வதற்கு பிரத்தியேகமான பொதுமக்கள் முறைபாட்டு அலகொன்று நிறுவனத்தினுள் நிறுவப்பட்டுள்ளது. பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவை மூலம் பயண வசதிகளைப் பெற்றுக் கொள்ளும் பயணிகளுக்கு குறிப்பிட்ட பேருந்தில் முகங்கொடுக்க வேண்டி ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் பேருந்து ஊழியர்களினால் மேற்கொள்ளப்படும் நியாயமற்ற மற்றும் நேர்மையற்ற செயற்பாடுகள் தொடர்பிலான சந்தர்ப்பத்தின் போது முறைபாடுகளை முன்வைப்பதற்கான வாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், முறைபாடு கிடைக்கப் பெறும் ஊடகங்களாக 1955 துரித தொலைபேசி அழைப்பு அலகின் ஊடாக முறைபாடுகளை முன்வைப்பதற்கு மேலதிகமாக கடிதம் மூலம், பெக்ஸ் ஊடாக, மின்னஞ்சல் ஊடாக மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அலுவலக வலைத்தளத்தில், MyBus-SL App ஊடாக மற்றும் WhatsApp ஊடாக மற்றும் சமூக வலைத்தளங்கள் (Facebook Page) மூலம் முறைபாடுகளைப் பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்படும். அதன்போது 07 நாட்களிலும் 24 மணித்தியாலங்களாகச் செயற்படும் விதத்தில் 1955 துரித அழைப்பு அலகின் ஊடாக பேருந்துச் சேவைகளுக்கான முறைபாடுகள் பெற்றுக் கொள்ளப்படுவதுடன், அம்முறைபாடுகள் தன்னியக்கத் தொகுதியில் சேர்க்கப்பட்டதும் முறைபாட்டாளரின் கைத்தொலைபேசிக்கு குறுந்தகவல் ஊடாக முறைபாட்டிற்குரிய விசாரணை இலக்கம் அனுப்பிவைக்கப்படும். அவ்வாறு கிடைக்கப்பெறும் முறைபாடுகள் அவ்வப்போதே முறைபாட்டு விசாரணை அலகிற்கு தன்னியக்கமாக அனுப்பிவைக்கப்படுவதுடன் மேலதிக விசாரணை நடவடிக்கைகள் பொதுமக்கள் முறைபாடுகள் அலகினால் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு கிடைக்கப் பெறும் முறைபாடுகளில், மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துச் சேவைகளுக்குரிய முறைபாடுகள் தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிலேயே விசாரணை செய்யப்படுவதுடன், மாகாண அதிகார சபைக்குரிய பேருந்துகளின் முறைபாடுகளை உரிய மாகாண அலுவலகங்களுக்கு அனுப்பப்படும். அவ்வாறே இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்துகளின் முறைபாடுகள் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும். தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகள் தொடர்பில் அனுப்பப்படும் எல்லா முறைபாடுகளும் நன்கு பரிசீலிக்கப்படுவதுடன், மேலும் தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய முறைபாடுகளுக்கு முறைபாட்டாளர் தொலைபேசியில் தொடர்புகொண்டு தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல், விசாரணை நடவடிக்கைகளின் படி அழைக்கப்பட வேண்டிய

முறைபாடுகளிற்குரிய தரப்பினரை அழைப்பித்தல், குற்றத்தின் தன்மை மற்றும் பாரதூரத்தன்மை பொறுத்து பேருந்து உரிமையாளர்/ஊழியர்குழுவிற்கு வாய்மொழி மூலம் எச்சரிக்கை செய்தல், எழுத்து மூலம் எச்சரிக்கை செய்தல், சாரதி/ நடத்துனரை தண்டனைப் பயிற்சிக்கு அனுப்புதல், நிர்வாகக் கட்டண அறவீடு செய்தல், ஊழியரகளின் சேவையினை இடைநிறுத்துதல், சாரதி/ நடத்துனர் நிபுணத்துவ அட்டையினைக் கறுப்புப் பட்டியலிற்குட்படுத்தல் போன்ற நடவடிக்கைகளும் அனுமதிப்பத்திர பயணமுறைகளை இடைநிறுத்துதல் மற்றும் சில சந்தர்ப்பங்களில் பயணிகள் சேவை உரிமத்தினை இரத்துச் செய்தல் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படும்.


முன்னேற்றம்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் துரித தொலைபேசி அழைப்பு (1955) ஒரு நாளைக்கு 24 மணித்தியாலமும் செயற்படுகின்றது. 2022ஆம் ஆண்டிற்குரிய முறைபாடுகளின் எண்ணிக்கை ரீதியிலான தகவல்கள் அட்டவணை பின்வருமாறு.

2022ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் 01 முதல் 2022 திசெம்பர் 31ஆந் திகதி வரை குற்ற வகைக்கேற்ப கிடைக்கப்பெற்ற முறைபாடுகள்

தொ. இல.	விபரம்	குறியீட்டு இல.	முறைபாடுகளின் எண்ணிக்கை	வீதம் %
01	அதிகரித்த கட்டண அறவீடு/மீதிப் பணத்தைக் கொடுக்காமை	SE04	762	19
02	பிரயாணிகளுடன் முரட்டுத்தனமாக நடந்து கொள்ளுதல்	MN12	589	15
03	அளவுக்கு அதிகமான பிரயாணிகளை ஏற்றுதல்	MJ12	601	15
04	முறையாகப் பயணச்சீட்டுக்களை வழங்காமை	MJ11	590	15
05	கவனயீனமாக வண்டியை ஓட்டுதல்/அதிக வேகம்/ கைத்தொலைபேசியைப் பயன்படுத்துதல்/போட்டிமிக்க ஓட்டுகை/ சிறு விபத்துக்கள்	MJ17 -02	339	9
06	சாரதி /நடத்துனர் நிபுணத்துவ அட்டை இன்றி பணியில் ஈடுபடுதல்	MJ07	35	1
07	இடைப்பட்ட இடங்களில் தேவையின்றி பேருந்தினை நிறுத்தி பயணிகளை ஏற்றுதல்	MN12-01	191	5
08	குறிக்கப்பட்ட நேர அட்டவணையை மீறுதல்	MJ01	228	6
09	குறிப்பிட்ட இடத்திலிருந்து ஆரம்பிக்காமை மற்றும் முடிவிடம் வரை போகாமை	SE03	237	6
10	பேருந்து பயணிகள் போக்குவரத்திற்கு பொருத்தமான நிலையில் இல்லாமை	MJ03	76	2
11	குளிரூட்டிகள் ஒழுங்கான முறையில் இயங்காமை	MJ02	52	1
12	GPS உபகரணம் செயற்படாமை	MN12-06	95	2
13	கூடிய சத்தத்தில் ஒலிப்பதிவு நாடா/ வானொலியை இயக்குதல்/ பொருத்தமற்ற வீடியோ காட்சிகள்	MN02	50	1
14	பேருந்துக் கட்டணங்களைக் காட்சிப்படுத்தாமை	MJ08	51	1
15	வேறு	other	25	1
	மொத்தம்		**3921**	**100**

மூலம்- தரப்பாதுகாப்பு மற்றும் வெளித் தொடர்புகள் திணைக்களம், தேபோஆ



அதன் பிரகாரம், 2022 திசெம்பர் 31 வரையில் மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்துகளில் பயணிக்கும் மக்கள் முகங்கொடுத்த பல்வேறு பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு 3487 முறைபாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அவற்றுள் பெரும்பாலான முறைபாடுகள் கவனயீனமான வாகத்தை ஓட்டுதல் தொடர்பிலேயே கிடைக்கப் பெற்றுள்ளன. எண்ணிக்கையில் அது 762 முறைபாடுகளாகும்.

மேலும், மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்துகளில் ஏற்படும் அபாயமிகு விபத்துகள் தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கடும் நடவடிக்கைகளை எடுக்கும். அபாயமிகு விபத்தொன்று பதிவாகியதும் உடனே பேருந்தின் இயக்கத்தினை இடைநிறுத்தி விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதுடன், நீதிமன்ற அறிக்கை மற்றும் பொலிஸ் அறிக்கை பிரகாரம் இவ் அனுமதிப்பத்திரத்தினை இரத்துச் செய்தல் மற்றும் அபாயமிகு விபத்தினை ஏற்படுத்திய சாரதிகளுக்கு மீண்டும் பொதுப் போக்குவரத்துச் சேவை பேருந்துகளில் பணி புரிவதற்கு இயலாதவாறு சேவைப் பதிவினை இரத்துச் செய்து கறுப்புப்பட்டியலில் உள்ளடக்கப்படும்.

- **நடமாடும் சோதனையிடல்கள் மூலம் வெளிப்படும் விடயங்களை விசாரணை செய்யும் அலகு**

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின பிரகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்து தனியார் பேருந்துகளிற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றது. அவ்வனுமதிப்பத்திரத்தின் கீழ் பயணிக்கும் பேருந்து தொடர்பில் நிபந்தனைகள் தொடரொன்று பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்நிபந்தனைகளின் பிரகாரம் பேருந்துகளின் செயற்பாடு குறித்து சோதனையிடல் நடமாடும் சோதனைப் பிரிவு, பெஸ்ரியன் மாவத்தை பேருந்துத் தரிப்பிடம், வவுனியா பேருந்துத் தரிப்பிடம் ஆகியவற்றினால் மேற்கொள்ளப்படும். அப்பரிசோதனைகளின் போது அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறியவாறு மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகளை இயக்குவதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் குறிப்பிட்ட பேருந்து தொடர்பில் விசாரணை செய்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். தரமிக்க சேவையொன்றினைப் பயணிக்கும்

மக்களுக்கு பெற்றுக் கொடுத்து பொதுப் போக்குவரத்தின் பால் அதிகமான எண்ணிக்கையில் பயணிகளை ஈர்த்துக்கொள்வதே இச்சேவையின் பிரதான நோக்கமாகும்.

முன்னேற்றம்

நடமாடும் பரிசோதனைப் பிரிவு, பெஸ்ரியன் மாவத்தை பேருந்துத் தரிப்பிடம், வவுனியா பேருந்துத் தரிப்பிடம் ஆகியவற்றினால் பயணிக்கும் வழியில் பரிசோதனை செய்யப்படும் பேருந்துகளில் இனங்காணப்படும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறியமைக்காக நிர்வாகக் கட்டணங்களை அறவிடுதல், நிபந்தனைகளை மீறும் சாரதிகள் நடத்துனர்களை சேவையில் பயிற்சிகளுக்கு அனுப்புதல், பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை இடைநிறுத்துதல் மற்றும் இரத்துச் செய்தல் போன்ற நடவடிக்கைகள் இவ்வலகின் கீழ் மேற்கொள்ளப்படும். 2022ஆம் ஆண்டில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிபந்தனைகளை மீறிய எண்ணிக்கை 1220 ஆகும்.

தொ.இல.	விபரம்	குறியீட்டு இல.	முறைபாடுகளின் எண்ணிக்கை	வீதம் %
1	குறிப்பிட்ட இடத்திலிருந்து ஆரம்பிக்காமை மற்றும் முடிவிடம் வரை போகாமை	SE03	503	12
2	பயணிகளிடமிருந்து அதிகமாக கட்டண அறவீடு செய்தல்	SE0Œ	202	5
3	குறிக்கப்பட்ட நேர அட்டவணையை மீறுதல்	MJ01	20	0.5
4	கட்டளைகளைக் கவனிக்காது பேருந்து ஓட்டுதல்	MJ0Œ	71	2
5	சாரதி /நடத்துனர் நிபுணத்துவ அட்டை இன்றி பணியில் ஈடுபடுதல்	MJ07	1423	33
6	பேருந்துக் கட்டணங்கள் காட்சிப்படுத்தப்படாமை	MJ08	256	6
7	முறைப்படி பயணச்சீட்டுக்களை வழங்காமை	MJ11	366	8.5
8	குறிப்பிட்ட அளவை விட அதிகமான பிரயாணிகளை ஏற்றுதல்	MJ12	158	4
9	காலாவதியாகிய சாரதி நடத்துனர் அடையாள அட்டையைப் பயன்படுத்துதல்	MN0—	436	10
10	காலந் தாழ்த்தி விசாரணைகளில் பங்குபற்றல்	MN1À	673	16
11	வேறு		129	3
	மொத்தம்		**4237**	**100**


மூலம்- தரப்பாதுகாப்பு மற்றும் வெளித் தொடர்புகள் திணைக்களம், தேபோஆ

அதன் பிரகாரம் விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நிபந்தனைகளை மீறும் நபர்களை எச்சரித்தல், நிர்வாகக் கட்டணங்களை அறவிடுதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- **மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்**

2021.12.31ஆந் திகதியில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் செல்லுபடியாகும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திர எணிணக்கை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

தொடர் இல.	சேவை வகை	பேருந்துகளின் எண்ணிக்கை
1	சாதாரண	1985
2	அரை சொகுசு	431
3	சொகுசு	557
4	அதி சொகுசு	178
மொத்தம்		**3151**



மாகாணங்களுக்கு இடையிலான செல்லுபடியாகும் பேருந்துச் சேவைகள்

- **மாகும்புர பல்நோக்கு போக்குவரத்து மையத்தின் பேருந்துச் சேவையினை மேம்படுத்துதல்**

மாகும்புர பல்நோக்கு போக்குவரத்து மையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை உச்சளவில் பொதுமக்கள் பயன்படுத்தும் சந்தர்ப்பத்தினை வழங்குவதை நோக்காகக் கொண்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பணிப்பாளர் சபையின் அனுமதியின் கீழ் ஏற்கனவே சொகுசு சேவையின் கீழ் வழங்கப்பட்டுள்ள பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் கொண்ட மேலதிக பேருந்துகளை தற்காலிக அனுமதிப்பத்திரத்தின் கீழ் பாதைகளைத் திருத்தி மாகும்புர முதல் நாட்டின் 16 பிரதான நகரங்கள் வரை 2022.02.01 ஆந் திகதி முதல் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

- **நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான வழிமுறையினைத் தயாரித்தல்**

2005, 2014, 2016, 2017ஆம் வருடங்களில் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் தொடர்பில் வழங்கப்பட்டிருந்த எல்லா அமைச்சரவை அனுமதிகளையும் இரத்துச் செய்து மாகாணங்களுக்கு இடையிலான பாதைகளுக்கு நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான வழிமுறையொன்றினைத் தயாரிக்குமாறு அமைச்சரவையினால் நிபுணர் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது. அதன் பிரகாரம், அந்நிபுணர் குழுவின் அறிக்கை தயாரிக்கப்பட்டு அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது. கமிட்டி ஒன்றின் மூலம் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு பிரேரிக்கப்பட்டு முன்னாள் அமைச்சரினால் அமைச்சரவைக்கு நிருபமொன்று அனுப்பப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நிதி அமைச்சர் அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் எழுப்பப்பட்ட விடயங்களைக் கவனத்திற் கொண்டு மேற்படி நடவடிக்கைகளை எடுக்குமாறு குறிப்பிட்டு, அமைச்சரவை தீர்மானத்தை வழங்கியுள்ளது. நிதி அமைச்சரின் அவதானிப்புகளின் பிரகாரம் நிபுணர் கமிட்டி மூலம் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையில் முன்மொழியப்பட்டுள்ள வழிமுறைகளில் சிக்கலான விடயங்கள் காணப்படின் அப்பிரேரணையில் குறிப்பிட்டுள்ள அளவுகோல்கள் மற்றும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு மற்றும் உள்ளடங்குமாறு உரிய எல்லா தரப்பினரின் இணக்கத்துடன் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை உறுதிப்படுத்தம் விதத்தில் அச்சிக்கலான விடயங்களுக்கு எளிய வழிமுறையொன்றை உள்ளடக்கியவாறு அவ் அறிக்கையினைத் திருத்தியமைத்து அமைச்சரவைக்கு 2 மாதங்களுக்குள் மீண்டும் அனுப்பி வைக்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் இணை அமைச்சினால் உரிய அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகின்றது.

- **2015ஆம் ஆண்டு முதல் தற்காலிக அனுமதிப்பத்திரத்தின் கீழ் தெற்கு அதிவேகப் பாதை ஊடாகப் பேருந்துகளை இயக்கும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திர உரிமையாளர்களுக்கு நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்**

மேற்படி விடயம் தொடர்பில் பணிப்பாளர் சபைக்கு விடயங்கள் அறிக்கையிடப்பட்டதுடன், பயணிகள் சேவை அனுமதிப்பத்திர உரிமையாளர்கள் தாக்கல் செய்துள்ள வழக்கினைத் தீர்த்து நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சரவையின் அனுமதியினைப் பெற நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டது. அதன் பிரகாரம், அமைச்சரவை அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதுடன், வழக்கு நடவடிக்கைகளை தீர்த்துக் கொள்ளும்படி பயணிகள் சேவை அனுமதிப்பத்திர உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. வழக்கு நடவடிக்கைகள் தீர்க்கப்பட்டதன் பின்னர் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் உரிய பாதையில் தொழில்நுட்ப மதிப்பை அறவிட்டு அதிவேகப்

பதையின் ஊடாக நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- **தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தினைத் திருத்தியமைத்தல்**

திருத்தப்பட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் சட்ட வரைவுகள் சட்டவரைஞர் திணைக்கத்தினால் மேலதிக நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட போதிலும், முச்சக்கர வண்டிக்கான அதிகாரசபையொன்றினை தாபிக்கும் 2021 வரவுசெலவு பிரேரணை செயற்படாமையால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத் திருத்தியமைத்தலுக்கு முச்சக்கர வண்டிகள், பள்ளிச் சிறார்களை ஏற்றிச் செல்லும் பேருந்துகள் மற்றும் வேன் வண்டிகள் மற்றும் அலுவலகப் போக்குவரத்துச் சேவைகளுக்கான நிபந்தனைகளைத் தயாரித்தல், தரநியமங்களைத் தீர்மானித்தல் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குதல் தொடர்பில் ஏற்பாடுகளை மீண்டும் உள்ளிட்டு, அமைச்சரவை நிருபமொன்று போக்குவரத்து அமைச்சிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- **2021ஆம் ஆண்டின் சபை கூட்டங்கள் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்களை நடாத்துதல் முன்னேற்றம்**

2022ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்ட ஆணைக்குழு கூட்டங்களின் எண்ணிக்கை	13
2022ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்களின் எண்.	04

வருடாந்த கணக்குகள

இலங்கை ரூபாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது

திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி	குறிப்பு	2022	2021
சொத்துக்கள்			
நடைமுறையற்ற சொத்துக்கள்			
சொத்துக்கள், பொறித்தொகுதி , உபகரணங்கள்	4	366,737,349.24	385,284,936.64
நடைபெற்றுக்கொண்டிருக்கும் பணிகள்		30,502,154.10	30,502,154.10
நூலகப் புத்தகங்கள்		1,364,973.81	1,269,973.81
மொத்த நடைமுறையற்ற சொத்துக்கள்		**398,604,477.15**	**417,057,064.55**
நடைமுறைச் சொத்துக்கள்			
கிடைக்க வேண்டியவை, வைப்புக்கள், முற்பணம்	5	11,267,911.70	12,038,356.05
பணிக்குழாத்தினர் கிடைக்க வேண்டியவை	6	34,170,500.00	27,806,515.00
தவணை வைப்புக்களில் முதலீடுகள்	7	47,167,553.63	44,842,369.40
திறைசேரி உண்டியல்களில் முதலீடுகள்	8	16,442,375.00	15,645,319.00
கிடைக்க வேண்டிய வட்டி		11,423,878.44	1,601,883.32
காசும் காசுக்கு சமமானவையும்	9	645,816,144.11	382,818,404.76
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**766,288,362.88**	**484,752,847.53**
மொத்தச் சொத்துக்கள்		**1,164,892,840.03**	**901,809,912.08**
பொறுப்புக்கள்			
நடைமுறையற்ற பொறுப்புக்கள்			
அரசாங்க மானியங்கள்	10	199,801,150.37	221,338,847.15
இளைப்பாற்று நலன் கடப்பாடுகள்	11	58,167,667.00	55,905,538.50
மொத்த நடைமுறையற்ற பொறுப்புக்கள்		**257,968,817.37**	**277,244,385.65**
நடைமுறை பொறுப்புக்கள்			
செலுத்த வேண்டியவை	12	2,092,191.14	1,572,067.70
மீளச் செலுத்தவேண்டிய கேள்விப்பத்திர வைப்புக்கள்		51,793,404.00	55,608,904.00
ஏற்பாடுகள் மற்றும் சேர் செலவினங்கள்			
ஏற்பாடுகள் மற்றும் சேர் செலவினங்கள்	13	199,240,223.88	91,769,582.11
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		**253,125,819.02**	**148,950,553.81**
திரண்ட மிகைகள் /(குறைநிலைகள்)		**653,798,203.64**	**475,614,972.62**
மொத்தப் பொறுப்புக்கள்		**1,164,892,840.03**	**901,809,912.08**

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள், இலங்கை அரசாங்கப் பிரிவின் கணக்கீட்டு நியமங்களின் (SLPSAS)பிரகாரம் தாயரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்படுகின்றது.

.....

பணிப்பாளர் (நிதி மற்றும் பொறுகை)

5 முதல் 08 வரையிலான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் 09 முதல் 16 வரையிலான பக்கங்களில் உள்ள குறிப்புக்கள் இந்நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒன்றிணைந்த பகுதியாகும்.
இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். இந்நிதிக்கூற்றுக்கள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு, அவர்களின் சார்பாக

.....
தலைவர்

.....
ஆணைக்குழு உறுப்பினர்

திகதி : 27.02.2023

அடைப்புக்குறிக்குள் இருக்கும் எண்கள் கழித்தல்கள் ஆகும்.

திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றுகைக் கூற்று	குறிப்பு	2022	2021
வருவாய்			
வருவாய்	14	391,793,781.41	87,924,167.99
ஏனைய வருமானம்	15	85,921,825.20	45,782,225.01
மொத்தம்		**477,715,606.61**	**133,706,393.00**
செலவீனங்கள்			
தொழிற்படு செலவுகள்	16		
ஆளணி ஊதியங்கள்	16.1	166,986,938.21	147,693,919.90
போக்குவரத்து	16.2	19,682,034.37	12,145,986.55
விசேட கமிட்டிக் கொடுப்பனவு			-
பயணச் செலவுகள், பிழைப்பூதியக் கொடுப்பனவு	16.3	3,143,060.00	948,000.50
நிறுவனச் செலவுகள்	16.4	41,495,248.71	34,610,830.70
நிலையான சொத்துக்களின் புதுப்பித்தல்களும் பாரமரிப்பும்	16.5	3,654,588.82	1,933,901.07
ஊழியர் நலன்புரி	16.6	11,515,135.67	6,890,333.11
பதவியணியினர் அபிவிருத்தி	16.7	397,141.53	216,610.00
சட்ட மற்றும் பிற கட்டணங்கள்	16.8	2,504,645.00	1,240,819.00
தகவல்கள்	16.9	957,866.90	572,145.55
தேய்மானம்	16.10	19,424,465.52	20,385,908.04
நிதிசார் கட்டணங்கள்	16.11	98,087.30	44,171.20
ஏனைய செலவினங்கள்	16.12	775,975.50	829,885.14
மொத்த தொழிற்பாட்டுச் செலவினங்கள்		**270,635,187.53**	**227,512,510.76**
ஆண்டிற்கான தொழிற்பாட்டு மிகை/ (குறைநிலை)		**207,080,419.08**	**(93,806,117.76)**
தொழிற்பாடற்ற வருவாய்	17	**4,664,658.92**	**13,749.19**
ஆண்டிற்கான தேறிய மிகை/(குறைநிலை)		**211,745,078.00**	**(93,792,368.57)**
கருத்திட்டங்களுக்கான அரச மானியங்கள்	18	**725,000,000.00**	**271,000,000.00**
அரசாங்க மானியங்கள் மீதான விசேட கருத்திட்ட செலவினங்கள்	19.1	**725,000,000.00**	**271,000,000.00**
NTC நிதிகள் மீதான விசேட கருத்திட்டச் செலவுகள்	19.2	**23,561,846.98**	**12,583,877.94**
ஆண்டிற்கான தேறிய மிகை/(குறைநிலை)		**188,183,231.02**	**(106,376,246.51)**

அடைப்புக்குறிக்குள் இருக்கும் எண்கள் கழித்தல்கள் ஆகும்.

2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான தேறிய சொத்துக்கள்/ உரிமையாண்மை மாற்றங்கள் கூற்று

		திரண்ட மிகைகள்/ (பற்றாக்குறைகள்)
2021 ஜனவரி 01 ஆந் திகதியில் மீதி		581,991,219.13
அரசாங்க மானியங்களுக்கு சரிப்படுத்தல்	**குறிப்பு -யு**	
முன்னைய ஆண்டு சரிப்படுத்தல்		
ஆண்டிற்கான மிகை/பற்றாக்குறை		(106,376,246.51)
2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதி		475,614,972.62
திறைசேரிக்கு மீண்ட நிதிகள்		10,000,000.00
ஆண்டிற்கான மிகை/பற்றாக்குறை		188,183,231.02
2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதி		653,798,203.64

அடைப்புக்குறிக்குள் இருக்கும் எண்கள் கழித்தல்கள் ஆகும்.

திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று	குறிப்பு	2022	2021
செயற்படு நடவடிக்கைகள் மூலமாக காசுப்பாய்ச்சல்			
ஆண்டிற்கான மிகை/(குறைநிலை)		188,183,231.02	(106,376,246.51)
காசு இல்லா அசைவுகள்			
தேய்மானம்		19,424,465.52	20,385,908.04
சொத்துக்களின் அகற்றுகை		(4,664,658.92)	(13,749.19)
அரசாங்க மானியங்கள் மீதான கடன்கரைப்பு		(21,537,696.78)	(22,167,003.87)
ஆண்டிற்கான பணிக்கொடைக் கட்டணங்கள்		5,163,951.00	5,248,909.50
வட்டி வருமானம்		(64,384,128.42)	(23,615,221.14)
முன்னைய ஆண்டு சரிப்படுத்தல்			
சலுகைக் கட்டணத் திட்டம்			
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் செயற்படு மிகை/(குறைநிலை)		**122,185,163.42**	**(126,537,403.17)**
தொழிற்படு மூலதனத்தில் மாற்றங்கள்			
கிடைக்க வேண்டியவை, வைப்புக்கள், முற்பணம்		770,444.35	(4,869,211.45)
பணிக்குழாத்தினர் கிடைக்க வேண்டியவை		(6,363,985.00)	(1,904,175.00)
கிடைக்கவேண்டிய வட்டி		(9,821,995.12)	992,079.46
செலுத்த வேண்டியவை		520,123.44	(298,417.23)
மீளச் செலுத்தவேண்டிய கேள்விப்பத்திர வைப்புக்கள்		(3,815,500.00)	(1,622,500.00)
ஏற்பாடுகள் மற்றும் சேர் செலவினங்கள்		107,470,641.77	(17,091,876.51)
(பயன்படுத்தப்பட்ட)/நடவடிக்கைகள் மூலமாக காசு		**210,944,892.86**	**(151,331,503.90)**
செலுத்தப்பட்ட பணிக்கொடை		(2,901,822.50)	(2,470,872.50)
சொத்துக்களின் அகற்றுகை மூலம் பெறப்பட்ட காசு		4,699,752.00	44,050.00
(பயன்படுத்தப்பட்ட)/தொழிற்படு நடவடிக்கைகள் மூலமாக தேறிய காசுப் பாய்ச்சல்		**212,742,822.36**	**(153,758,326.40)**
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்கள்			
காணி,பொறித்தொகுதி மற்றும் கருவிகள் சுவீகரிப்பு		(911,971.20)	(802,289.20)
நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை சுவீகரிப்பு		-	-
நூலகப் புத்தகச் சுவீகரிப்பு		(95,000.00)	-
திறைசேரி உண்டியல்கள் தவணை வைப்புக்களில் தேறிய முதலீடு		(3,122,240.23)	(3,498,915.99)
வட்டி கிடைப்பனவுகள்		64,384,128.42	23,615,221.14
(பயன்படுத்தப்பட்ட)/முதலீட்டு நடவடிக்கைகள் மூலமாக தேறிய காசுப் பாய்ச்சல்		**60,254,916.99**	**19,314,015.95**
நிதிசார் நடவடிக்கைகள் மூலமாக காசுப் பாய்ச்சல்			
திறைசேரிக்கு மாற்றப்பட்ட நிதிகள்		(10,000,000.00)	-
(பயன்படுத்தப்பட்ட)/நிதிசார் நடவடிக்கைகள் மூலமாக தேறிய காசுப் பாய்ச்சல்		**(10,000,000.00)**	-
ஆண்டிற்குள் காசும் காசுக்கு சமமானவையில் உள்ள தேறிய மாற்றங்கள்		**262,997,739.35**	**(134,444,310.45)**
வருட ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவையும்		382,818,404.76	517,262,715.21
வருட இறுதியில் காசும் காசுக்கு சமமானவையும்	குறிப்பு 9	**645,816,144.11**	**382,818,404.76**

அடைப்புக்குறிக்குள் இருக்கும் எண்கள் கழிந்தல்கள் ஆகும்.

1. தாபனத் தகவல்கள்

1.1 அறிக்கையிடும் நிறுவனம்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு 1991 இல 37 ஐக் கொண்ட தேபோஆ சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் அலுவலகம் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறும் பிரதான நிலையம் இல 241, பூங்கா வீதி, கொழும்பு 05இல் அமைந்துள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2022ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதிசார் தரவுகள் உள்ளடங்குகின்றன.

1.2 பிரதான பணிகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை

பயணிகள் பேருந்துகள் மூலம் பயணிக்கும் மக்களுக்கு போக்குவரத்துச் சேவையினை வழங்குதல் மற்றும் பயணிகள் பேருந்துகளுக்கான நிச்சயிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு பயணிகள் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் குறித்து இலங்கை அரசிற்கு ஆலோசனைகளை வழங்குதல் என்பனவே ஆணைக்குழுவின் பணியாகும்.

1.3 நிதியாண்டின் இறுதியில் ஆணைக்குழு 176 நிரந்தரமான ஊழியர்களையும் ஒப்பந்த அடிப்படையில் 8 ஊழியர்களையும் கொண்டிருந்தது.

1.4 அறிக்கையிடும் திகதி

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடும் திகதி திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவுறும்.

1.5 வெளியிடுவதற்கான அதிகாரமளிக்கப்பட்ட திகதி

2023/02/27ஆந் திகதியன்று ஆணைக்குழுவின் அங்கத்தவர்களால் நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

2. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

2.1 தயாரித்தலின் அடிப்படை

அரச மானியங்கள் மற்றும் அரசாங்க நிதி உதவி வெளிப்படுத்தல்கள் கணக்கீடு - LKAS 20- பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க அரச ஏற்பாடுகள் இனங்காணப்பட்டு மற்றும் அளவிடப்பட்டுள்ளதுடன், இலங்கைப் பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களின் (SLPSASs)பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்கள் வரலாற்று ரீதியான உடன்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. இலங்கைப் பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களின் (SLPSASs) பிரகாரம் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சில சிக்கல்மிகு கணக்கீட்டு மதிப்பீடுகள் தேவையாகும். மேலும் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கும் படிமுறையில் முகாமையானது அதன் தீர்வுகளைப் பயன்படுத்துதல் அவசியமாகும். நிதிசார் கூற்றுக்களுக்கு முக்கியமான எடுகோள்கள் மற்றும் மதிப்பீடுகள் உள்ள பகுதிகள் அல்லது உயர்ந்த அளவில் தீர்மானங்கள் அல்லது சிக்கல்தன்மை கொண்டுள்ள பகுதிகள் குறிப்பு 3இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

2.2 கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள்

கீழ் குறிப்பிட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் மாற்றங்கள் வேறு வழியில் குறிப்பிட்டால் ஒழிய நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்படும் காலப்பிரிவிற்கு தொடர்ந்தும் பயன்படுத்தப்படும்.

நடப்பு ஆண்டின் விடயங்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டு சிறந்த முன்வைப்பிற்காக கடந்த வருடத்தின் நிதிசார் கூற்றறுக்களின் முன்வைத்தல் மற்றும் பகுப்பாய்வு தேவையான இடங்களில் சரிப்படுத்தப்பட்டுள்ளன.

2.3 வெளிநாட்டு நாணய மாற்றம்

2.3.1 தொழிற்படு மற்றும் முன்வைத்தல் நாணய அலகு

நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிலுவை நிறுவனத்தினால் செயற்படுத்தப்படும் ஆரம்பப் பொருளாதார சூழலின் படியே அளவிடப்படும். நிதிக் கூற்றுக்கள் ஆணைக்குழுவின் முன்வைத்தல் நாணயமான இலங்கை ரூபாவில் (LKR) முன்வைக்கப்பட்டுள்ளன.

2.3.2 கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிலுவைகள்

வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள் தொழிற்படு நாணய கொடுக்கல் வாங்கலாக மாற்றப்படுவது கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற தினத்தில் காணப்பட்ட செலாவணி வீதத்தின் அடிப்படையிலாகும்.

நிதிக் கூற்றுக்கள் தொடரும்..

2.4 சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள்

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள் என்பன முகாமையினால் எதிர்பார்க்கப்படும் விதத்தில் செயற்படுத்துவதற்கு இயலுமான இடம் மற்றும் அதற்கு தேவையான நிலைமைக்கு சொத்துக்களை கொண்டு வருவதற்கு நேரடியாக மேற்கொள்ளப்படும் செலவினங்கள் உட்பட ஆரம்பத்தில் செலவில் இனங்காணப்படும்.

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள் மீதான செலவுகளிலிருந்து திரண்ட தேய்மானம் மற்றும் திரண்ட பெறுமதி இழப்பு நட்டங்கள் ஆகியவற்றைக் கழித்து வரும் வரலாற்றுச் செலவில் குறிக்கப்படும்.

அச்செலவினால் சொத்தின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலத்தை நீடிக்க முடிந்தால் அதனால் உருவாகும் இலாபங்கள் தாபனத்திற்கு கிடைத்தாலேயே பிந்திய கால செலவுகள் சொத்துக்களின் காவுகைத் தொகையில் உள்ளடக்கவோ அல்லது சொத்தாகவோ இணங்காணப்படுவதுடன், அவ்வுருபடியின் செலவினை நம்பகமான முறையில் அறவிட முடிகின்றது. தாபனம் ஏனைய சொத்துக்களை நாளாந்தம் பராமரிப்பதற்கும் பேணுவதற்கும் மேற்கொள்ளும் செலவுகள் விபரமான வருமானக் கூற்றில் உரிய காலப்பகுதிக்கான செலவாகக் கருதப்படும்.

காணிகள் பெறுமதி இறக்கஞ் செய்யப்படாததுடன், ஏனைய சொத்துக்களின் தேய்மானம் நேர்கோட்டு முறைமையைப் பயன்படுத்தி கீழே காட்டப்பட்டுள்ளவாறு மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயட்காலத்தினுள் செலவு ஒதுக்கப்பட்டு அளவிடப்படும்.

சொத்துக்கள் வகை	**வருடம்**
மோட்டார் வாகனங்கள்	05 ஆண்டுகள்
தளபாடங்களும் பொருத்திகளும்	10 ஆண்டுகள்
அலுவலக உபகரணங்கள்	05 ஆண்டுகள்
பல்வேறு உபகரணங்கள்	05 ஆண்டுகள்
கணினிகளும் அச்சு இயந்திரங்களும்	04 ஆண்டுகள்
இயந்திரங்கள்	05 ஆண்டுகள்
கட்டடங்கள்	20 ஆண்டுகள்
இலத்திரனியல் காட்சிப்பலகைகள் (LED)	03 ஆண்டுகள்

சொத்தின் காவுகைத் தொகை அதன் மதிப்பிடப்பட்ட மீளப்பெறக்கூடிய தொகையை விடக் கூடுதலாக இருப்பின், அச்சொத்தின் காவுகைத் தொகை உடனடியாக மீளக் கிடைக்கக்கூடிய தொகையில் பதிவு செய்யப்படும்.

நூலகப் புத்தகங்களில் தேய்மானம் வழங்கப்படவில்லை.

2.5 தவணை வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மீதான முதலீடுகள்

தவணை வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் முதிர்வுப் பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

2.6 கிடைப்பனவுகள்

கிடைப்பனவுகள் என்பது பெற்றுக்கொள்ளப்படும் சேவைகளுக்காக செலுத்த வேண்டியுள்ள பணமாகும். கூட்டுத்தொகை சாதாரண தொழிற்படு சுழற்சியில் (ஒரு வருடத்தினுள் அல்லது அதற்குக் குறைவாக) எதிர்பார்க்கப்படுவதுடன், கிடைப்பனவுகள் நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படும். கிடைப்பனவுகளை இனங்காணல் மற்றும் கணிப்பிடல் கொடுக்கல்வாங்கல் செய்யும் பெறுமதியில் இனங்காணப்பட்டு கணிக்கப்படும்.

2.7 காசும் காசுக்கு சமமானவையும்

காசுப் பாய்ச்சல் கூற்றில் கையிலுள்ள பணம், வங்கிகளுடனான அழைப்பில் உள்ள தவணை வைப்புக்கள், ஏனைய மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான அசல் முதிர்வுடன் கூடிய
குறுங்கால உயர் திரவத்தன்மைக் கொண்ட முதலீடுகள் என்பன காசும் காசுக்கு சமமானவையில் உள்ளடங்குகின்றன.

2.8 கொடுப்பனவுகள்

கொடுப்பனவுகள் என்பது வழங்குனர்கள் மற்றும் சேவை வழங்குனர்களிடம் இருந்துபெற்றுக்கொள்ளும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்குச் செலுத்த வேண்டிய பொறுப்புக்களாகும். கொடுப்பனவு வர்த்தகத்தில் சாதாரண தொழிற்படு வர்த்தக வட்டத்தில் (1 வருடத்தினுள் அல்லது அதற்குக் குறைவாக) மேற்கொள்ளவேண்டிய கொடுப்பனவு எனின், அது நடைமுறைப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படும். அவ்வாறு இல்லாவிடின், அவை நடைமுறையற்ற பொறுப்புக்களாக இனங்காணப்படும்.

கொடுப்பனவுகள் வர்த்தகத்தின் சாதாரண தொழிற்படு வட்டத்தில் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதால், ஆரம்பத்தில் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளும் விலையில் இனங்காணப்பட்டு பின்னர் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளும் விலையில் அளவிடப்படும்.

(ஆ)	1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பிரிவு	மேலதிக நிதியை முதலீடு செய்யும் போது நிதி அமைச்சரின் இணக்கம் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சரின் அங்கீகாரமும் பெறப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாமல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆணைக்குழுவினால் 2022 ஆம் ஆண்டில் ரூபா 641,978,981 ஆன குறுகிய கால முதலீடுகள் செய்யப்பட்டிருந்தன.
(இ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக்கோவையின் நிதிப் பிரமாணம் 1645(அ)	வாகனங்களுக்கு பொறுப்பான அதிகாரியால் தனது பொறுப்பிலுள்ள ஒவ்வொரு வாகனத்திற்கும் வாகன பதிவுக்குறிப்பு புத்தகமொன்று வைக்கப்பட்டு ஒழுங்காக அதில் அனைத்துப் பதிவுகளும் வைக்கப்பட வேண்டிய போதிலும், ஆணைக்குழுவின் வாகனங்களுக்கான பதிவுக்குறிப்பு புத்தகங்கள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.
(ஈ)	2021 நவம்பர் 16 ஆம் திகதிய பீஈடி 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.8 ஆம் பிரிவு	பொது முயற்சி நிறுவனங்களால் சம்பந்தப்பட்ட நேரடி அமைச்சின் செலவுகள் செய்யப்பட முடியாத போதிலும், ஆணைக்குழுவினால் அமைச்சினால் நடாத்தப்பட்ட வேலைத்திட்டமொன்றுக்காக ரூபா 198,250 மற்றும் அமைச்சரின் உத்தியோகவூர்வ மனையின் பாதுகாப்புச்சேவைக்காக ரூபா 225,128 உம் ஆக ரூபா 423,378 ஆன செலவுகள் செய்யப்பட்டிருந்தன.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழுவின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணக்கமற்ற வகையில் செயற்பட்டிருந்தது என.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழுவின் வளங்களை சிக்கனமாகவும் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் காலப்பகுதிக்குள் உரிய சட்டவிதிகளுக்கு இணங்க பெறுகைகள் மேற்கொண்டு பயன்படுத்தியிருக்கவில்லை என.

(அ) ஆணைக்குழுவிற்கு 2021 நவம்பர் 26 ஆம் திகதி காலி வீதி வழித்தட பேருந்துகளில் பொருத்துவதற்காக 500 GPS சாதனங்கள் போக்குவரத்து அமைச்சின் சகசர செயற்திட்டத்தின் கீழ் பெறப்பட்டிருந்தும் , 2023 பெப்ரவரி 16 வரை பொருத்தப்பட்டிருந்த மொத்த GPS சாதனங்களின் எண்ணிக்கை 186 ஆக இருந்ததுடன் மீதமுள்ள 314 உபகரணங்களை பேருந்துகளில் பொருத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த GPS சாதனங்களின் உத்தரவாதக் காலம் முடிவடையும் தருவாயில் இருந்த போதிலும் ஆணைக்குழு இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து சேவைகளை வழங்குவதற்காக பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான ஒழுங்கான முறைமையொன்றை தயாரித்து அதன் பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தில் திருத்தங்களைச் செய்வதற்கு ஆணைக்குழு இதுவரை நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(ஆ) இலாபமற்ற வழித்தடங்களில் பேருந்து சேவைகளை வழங்கும் நோக்கத்துடன் 2005 ஆம் ஆண்டு முதல் கேமி செரிய செயற்திட்டம் தொடங்கப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டிறுதியில் 11 செயற்திட்டங்கள் மட்டுமே செயற்பாட்டில் இருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டில் ரூபா 1,287,864 செலவிடப்பட்டிருந்தது. வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி, ஏற்கனவே உள்ள சேவைகளை பராமரிப்பதற்கும் மற்றும் 40 புதிய சேவைகளை தொடங்குவதற்கும் ரூபா 14.890 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் எவ்வித புதிய சேவைகளையும் தொடங்குவதற்கு ஆணைக்குழு நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் நிசி செரிய சேவைகளை பராமரிப்பதற்கும் மற்றும் 100 புதிய செயற்திட்டங்களை செயல்படுத்துவதற்கும் ரூபா 34.5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், எவ்வித புதிய சேவைகளையும் தொடங்குவதற்கு ஆணைக்குழு நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(ஈ) ஆணைக்குழுவின் 2022 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி, முறையான மதிப்பீடு இல்லாமல் பாதை தேவை மற்றும் 14 சேவை தர கணிப்பீடுகளுக்காக ரூபா 5,000,000 ஆன ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இதில் ரூபா 2,568,180 செலவிடப்பட்டு 17 கணிப்பீடுகள் நடாத்தப்படடிருந்தன. மீதமுள்ள தொகையில் உரிய ஏற்பாடுகளுக்கு உரித்தற்ற பேருந்து முனையங்களின் செயற்பாடு மற்றும் பராமரிப்புக்காக ரூபா 2,621,665 செலவிடப்படடிருந்தது.

(உ) நிறுவனத்துக்கு சொந்தமான வாகனமொன்று ரூபா 283,135 ஆன செலவொன்று மேற்கொள்ளப்பட்டு பழுதுபார்க்கப்பட்டிருந்தும் இந்த வாகனம் ஓட்டத்திலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டு நிறுவன வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் வாகனம் சிதைந்து காணப்பட்டது.

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் வேறு சட்ட மற்றும் முறைப்படுத்தற் தேவைகள் தொடர்பாக 2018 இல 19ஐக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கணினிமயப்படுத்தப்பட்ட விலைமனு வைப்புப் பேரேடொன்று பேணப்படுவதுடன், அதற்கு மேலதிகமாக வலைமனு அலக்கத்தின் படி விலைமனு சமர்ப்பித்தவர்களின் பெயர்கள் மற்றும் பற்றுச்சீட்டு இலங்கங்களுடன் கூடிய விபரமான ஆவணங்களை உள்ளடக்கிய கோவையொன்று கணக்குப் பிரிவில் பேணப்படுகின்றது.

அவ்வாறே, விசாரணையில் குறிப்பிட்டுள்ளவாறு மேற்கூறப்பட்ட விபரமான ஆவணங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு விலைமனு வைப்பு ஆவணமொன்றினைத் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்குச் சொந்தமான மோட்டார் வாகனங்கள் மீண்டும் முழுமையாகத் தேய்மானஞ் செய்யப்பட்டு வேறுபாட்டினை இனங்காண்பதற்கும் பிழைகளைச் சரிசெய்வதற்கும் குறிப்பெடுக்கப்பட்டு அக்கணக்கீட்டு நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(இ) இச்செயற்றிட்டம் 2023.04.19ஆம் திகதி நிறைவுசெய்யப்பட்டதுடன் அதன் பிரகாரம் 2023ஆம் ஆண்டிற்குரிய காலத எல்லைக்கான தேய்மானங்கள் 2023 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கப்படும் போது மேற்கொள்ளப்படும்.

2. **வேறு சட்ட மற்றும் முறைப்படுத்தற் தேவைகள் தொடர்பான அறிக்கை**

2.2.2

(அ) 1991 இல 37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 28ஆவது பிரிவின்பிரகாரம் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பயணிகள் சேவை அனுமதிப் பத்திரமொன்றை வேறொரு நபருக்கு சாட்டுவதற்கு முடியாததுடன் அவ்வாறான சாட்டுதல் செல்லுபடியாகாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், சட்டத்தின் இப்பிரிவு திருத்தப்படல் வேண்டும் என ஆணைக்குழ இனங்கண்டுள்ளதுடன், ஏற்கனவே உத்தேசிக்கப்பட்ட சட்ட திருத்தங்களின் போது இப்பிரிவினைத் திருத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போதைக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால்வழங்கப்பட்ட பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் உரிமையினைத் திருத்தஞ் செய்யாததுடன், அனுமதிப்பத்திரதாரி இறக்கும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் அதன் உரித்தினை உரித்துபெறும் தரப்பினருக்கு சாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்போது அனுமதிப்பத்திரதாரி இறந்ததன் பின்னர் மாத்திரம் பேருந்தினை இயக்குவதற்கு மற்றும் அதனால் ஏற்படும் வெற்றிடம் காரணமாக பொதுப் பயணிகளுக்கு ஏற்படும் இடைஞ்சல்களைத் தவிர்ப்பதற்காக துரிதமாகப் பயணிகள் சேவை அனுமதிப்பத்திர உரித்தினைப் பெறும் தரப்பினரிடம் சாட்டுதல் மேற்கொள்ளப்படும். அதன்போது புதிய பயணிகள் சேவை அனுமதிப்பதிப்பத்திரமொன்று வழங்கப்படாததுடன், இறந்த அனுமதிப்பத்திரதாரியின் அனுமதிப்பத்திரத்திற்குப் பதிலாக அவரது வாரிசிற்கு பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் திருத்தஞ் செய்யப்படுவது மாத்திரம் மேற்கொள்ளப்படும்.

அதன் பிரகாரம், பணிப்பாளர் சபையியிலிருந்து அதற்கான அனுமதியினைப் பெற்று அனுமதிப்பத்திரதாரி இறந்ததன் பின்னர் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் திருத்தஞ் செய்யப்படும்.

(ஆ) தற்காலிக மேலதிக பணத்தினை முதலீடு செய்வதற்காக திறைசேரியின் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (குறிப்பிட்ட கடிதத்தின் பிரதி கணக்காய்வாளரின் இல ஆர்ரீ/பீ/என்ரீசீ/எப்ஏ/2012/22 கொண்ட விசாரணைகளுக்கான பதில்களுடன் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.)

எவ்வாறெனினும் 2021 ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதி நடைபெற்ற அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தின் போது, குறுங்கால மேலதிக நிதியங்களை ஏழு நாள் அழைப்பு வைப்புக்களில் முதலீடு செய்வதற்குப் பதிலாக ஒரு பகுதியை கூடிய வட்டி வருமானமொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யுமாறு அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. (அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்ட

அறிக்கைகளின் பிரதியொன்று இல ஆர்ரீ/பீ/என்ரீசீ/எப்ஏ/2012/22 கொண்ட விசாரணைகளுக்கான பதில்களுடன் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.)

இதற்கு மேலதிகமாக தற்காலிக மேலதிக நிதியத்தினை முதலீடு செய்வதற்காக திறைசேரியின் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சிற்கு 2019.02.07ஆந் திகதி கொண்ட கோரிக்கையொன்று அனுப்பப்பட்டுள்ளதுடன், இது வரையில் அதற்கான பதிலொன்று கிடைக்கப் பெறவில்லை என்பதை தயவுடன் அறிவிக்கின்றேன்.

(இ) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் எல்லா வாகனங்களிற்கும் வாகன பழுதுபார்த்தல், சேவை, காப்புறுதி என வெவ்வேறு பிரத்தியேகமான கோப்புகள் ஒழுங்காகப் பேணப்படுவதுடன், அவ்வவ் வாகனங்களிற்கான நாளாந்த இயக்க வரைபடம் முறையாகப் பேணப்படுகின்றது. ஆவ்வியக்கக் குறிப்புப் புத்தகங்கள் வாகனப் பொறுப்பு உத்தியோகத்தரால் பரிசீலிக்கப்பட்டு வந்தபோதும் தினசரி குறிப்புப் புத்தகம் பேணப்படாதிருந்ததுடன் எதிர்காலத்தில் தினசரி குறிப்புப் புத்தகப் பரிாமரிப்பிற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஈ) 2022.06.04 ஆந் திகதி நடாத்தப்படவிருந்த போக்குவரத்துத் துறையின் அபிவிருத்திக்காக குறுங்கால வழிமுறைகளுக்கான செயலமர்விற்கு செலவிடப்பட்ட தொகை 427,575.00 ரூபாவாகும். ஆச்செலவினை மேற்கொள்வதற்காக 198,250.00 ரூபா பங்களிப்பொன்றை வழங்குமாறு போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அக்கொடுப்பனவினை மேற்கொள்ளல் போக்குவரத்து அமைச்சின் இல MT/02/01/01/24 மற்றும் 2022.08.17 ஆந் திகதி கொண்ட கடிதத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டது என்பதை தயவுடன் அறிவித்துக் கொள்கின்றேன். ((இணைப்பு 01)

2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் அமைச்சர் பதவியினை வகித்த முன்னாள் கௌரவ அமைச்சர், பவித்ரா வன்னிஆரச்சி அவர்களின் உத்தியோகபூர்வ விடுதியின் பாதுகாப்பிற்காக 2021 ஆகஸ்ட் 19ஆந் திகதி முதல் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை ஈடபடுத்துமாறு போக்குவரத்து அமைச்சின் செயலாளரினால் வாய்மொழி மூலமாக தலைவர் அவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. ஆதன் பிரகாரம், அதற்கான கொடுப்பனவை மேற்கொள்வதற்கான அனுமதி NTC/AD/MOT/2020/01 இலக்கம் கொண்ட மற்றும் 2021.12.01ஆந் திகதியிட்ட கடிதத்தினால் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளரிடம் கோரப்பட்டதுடன், அதற்கான அனுமதி MT/01/12/17 இலக்கம் கொண்ட மற்றும் 2022.01.28ஆந் திகதியிட்ட கடிதத்தினால் கிடைக்கப் பெற்றதும் உரிய கொடுப்பனவுகள் 2022 மார்ச் மாதம் வரையில் 08 மாத காலத்திற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. ஊரிய அனுமதி கிடைக்கப் பெற்ற கடிதம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 02) இதன் போது செலவுக் கட்டுப்பாட்டின் ஒரு படியாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைமை அலுவலகப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பாதுகாப்பு அலுவலர்களில் ஒருவரைக் குறைத்து உத்தியோகபூர்வ விடுதியின் பாதுகாப்பிற்காக ஈடுபடுத்தப்பட்டமையால் உத்தியோகபூர்வ விடுதியின் பாதுகாப்பிற்காக மேலதிகச் செலவொன்று மேற்கொள்ளப்படவில்லை.

2.2.4

(அ) 2021.11.26ஆந் திகதி 500 GPS உபகரணங்கள் கிடைப்பினும் அவற்றினால் தரவுப் பரிமாற்றல் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு குறிப்பிடத்தக்க காலம் எடுக்க நேரிட்டது. எனினும் ஏற்கனவே இவ் உபகரணங்கள் பேருந்துகளில் பொருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தினை திருத்தியமைத்தல் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், சட்டத் திருத்திற்கு உரிய பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) கெமி செரிய செயற்றிட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டு வரை செல்லுபடியாகும் சேவை ஒப்பந்தத்தின் பிரகாரம் இயக்கத்தினை ஆரம்பிக்க வேண்டிய சேவைகளின் எண்ணிக்கை 12 ஆகும். ஓப்பந்தம் கைச்சாத்திடப்பட்டும் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு கொடுப்பனவிற்காக தினசரிக் குறிப்புப் பத்திரம் முன்வைக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 09 ஆகும். (இணைப்பு இல 03)

அதன் பிரகாரம், 2022ஆம் ஆண்டாகையில் உதவித்தொகையினைப் பெற்று இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 9 ஆவதுடன், அவ் ஒன்பது சேவைகளையும் பேணிச்

செல்வதற்கும் 2022ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்ட 40 புதிய சேவைகளிற்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் 2022ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை 14.89 மி. ரூபாவாகும். (கெமி செரிய செயற்றிட்டத்தின் கீழ் இயக்க கி.மீ. 1இற்கு உச்சளவு உதவித்தொகை 38/- ரூபா கொடுப்பனவு வழங்கல் என்ற அடிப்டையில்)

அதன் பிரகாரம், 2022ஆம் ஆண்டில் மே மாதமாகையில் புதிய கெமி செரிய சேவைகளை ஆரம்பிப்பதற்கு பயணிள் கேள்வி ஆய்வுகளை மேற்கொண்டு பணிப்பாளர் சபைக்கு முன்வைக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 5 ஆகும். (இணைப்பு இல 04)

எனினும், 2022ஆம் ஆண்டில் எரிபொருள் விலை பல முறை தொடர்ச்சியாக அதிகரித்தமை மற்றும் பேருந்துகளின் விலை, அவற்றிற்கான உதிரிப்பாகங்களின் விலை, காப்புறுதி, வரி வீதம் மற்றும் ஊழியர் சம்பளங்கள் அபரிதமான முறையில் அதிகரித்தமையால் கீழ்வருமாறு பேருந்துகளின் 1 கி.மீற்றருக்கான இயக்கச் செலவு அதிகரித்ததன் காரணமாக இவ்வதிகரிப்பின் படி இல அப/18/0957/808/008 கொண்ட 2018.05.08ஆந் திகதியிட்ட அமைச்சரவை நிருபத்தினால் கிடைக்கப் பெற்ற அனுமதியின் பிரகாரம் கெமி செரிய சேவைக்காகக் கொடுப்பனவு செய்யப்படும் உதவித்தொகை பின்வரும் விதத்தில் திருத்தப்படுதல் வேண்டும்.

திகதி	1 கி.மீற்றருக்கான இயக்கச் செலவு	கெமி செரிய 1 கி.மீற்றருக்கு செலுத்தப்படும் உச்சளவு தொகை
2022.01.05	ரூபா 123.62	ரூபா 41.00
2022.03.15	ரூபா 140.56	ரூபா 47.00
2022.04.19	ரூபா 175.36	ரூபா 58.00
2022.05.24	ரூபா 209.54	ரூபா 70.00
2022.07.01	ரூபா 276.79	ரூபா 92.00
2022.07.18	ரூபா 270.63	ரூபா 90.00
2022.08.05	ரூபா 267.55	ரூபா 89.00

2022ஆம் ஆண்டில் சமூக நலன்புரியினை அடிப்படையாகக் கொண்ட செயற்றிட்டங்களிற்காக தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 900 மி.ரூபாவில் (2022 தேசிய வரவுசெலவு திட்டத்தில் 650 மி.ரூபா ஒதுக்கப்பட்டதுடன், 2022 இடைக்கால வரவுசெலவு திட்டத்தி அத்தொகை 900 மி. ரூபா வரை அதிகரிக்கப்பட்டது.) 1 கி.மீற்றருக்கு 38/- ரூபா உச்சளவின் அடிப்படையில் கொடுப்பனவு செய்வதற்கே 14.89 மி. ரூபா இச்செயற்றிட்டத்திற்காக ஒதுக்கப்பட்டதுடன், மேற்படி உள்ளவாறு 2022.04.19ஆந் திகதி 1 கி.மீற்றருக்கு ஆகுசெலவின் பிரகாரம் 1 கி.மீற்றருக்கு 58.̇.- ரூபா வீதம் கொடுப்பனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டமையால் 2022ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதாக இருக்கவில்லை.

இவ்விடயங்களைக் கவனத்திற் கொண்டதன் பின்னர், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையினால் கெமி செரிய செயற்றிட்டத்தின் கீழ் எவ்விதத்திலும் புதிய சேவைகளை ஆரம்பிப்பபதைத் தற்காலிகமாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சேவைகளை இதுவரையில் செய்யப்பட்ட கொடுப்பனவு வழிமுறைகளின் கீழ் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுமாறும் 2022.05.05ஆந் திகதி நடைபெற்ற ஆணைக்குழ கூட்டத்தில் இல 59/2022 கொண்ட பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் அனுமதி பெற்றுக் கொடுக்கப்பட்டது.

அதனால், 2022.05.05ஆந் திகதியாகையில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்ட இணைப்பு இல 02 உடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 5 புதிய சேவைகளை ஆரம்பித்தல் மற்றும் மீதமுள்ள புதிய சேவைகளை இனங்காண்பதற்கு ஆய்வுகளை மேற்கொள்ளுதல் இடைநிறுத்தப்பட்டன.

(இ) 2021 திசெம்பர்31ஆந் திகதியில் செயற்பாட்டில் இருந்த நிசி செரிய சேவைகள் எண்ணிக்கை191 ஆகும். 2022ஆம் ஆண்டினுள் 25 புதிய நிசி செரிய சேவைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இணைப்பு இல 05)

2022ஆம் ஆண்டாகையில் செயற்பாட்டில் இருந்த 191 நிசி செரிய சேவைகள் 1 கி.மீற்றருக்கு 19/- ரூபா வீதம் உதவித்தொகை வழங்கி மேற்கொண்டுச் செல்லல் மற்றும் 100 புதிய நிசி செரிய சேவைகளை ஆரம்பிப்பதற்கு தேசிய வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 900 மி.ரூபா தொகையில் (2022 தேசிய வரவுசெலவு திட்டத்தில் 650 மி.ரூபா ஒதுக்கப்பட்டதுடன், 2022 இடைக்கால வரவுசெலவு திட்டத்தி அத்தொகை 900 மி. ரூபா வரை அதிகரிக்கப்பட்டது.) ஒதுக்கப்பட்ட தொகை 34.53 மி. ரூபாவாகும். எனினும், 2022ஆம் ஆண்டில் எரிபொருள் விலை பல முறை தொடர்ச்சியாக அதிகரித்தமை மற்றும் பேருந்துகளின் விலை, அவற்றிற்கான உதிரிப்பாகங்களின் விலை, காப்புறுதி, வரி வீதம் மற்றும் ஊழியர் சம்பளங்கள் அபரிதமான முறையில் அதிகரித்தமையால் கீழ்வருமாறு பேருந்துகளின் 1 கி.மீற்றருக்கான இயக்கச் செலவு அதிகரித்ததன் காரணமாக இவ்வதிகரிப்பின் படி இல அப/18/0957/808/008 கொண்ட 2018.05.08ஆந் திகதியிட்ட அமைச்சரவை நிருபத்தினால் கிடைக்கப் பெற்ற அனுமதியின் பிரகாரம் கெமி செரிய சேவைக்காகக் கொடுப்பனவு செய்யப்படும் உதவித்தொகை பின்வரும் விதத்தில் திருத்தப்படுதல் வேண்டும்.

திகதி	1 கி.மீற்றருக்கான இயக்கச் செலவு	கெமி செரிய 1 கி.மீற்றருக்கு செலுத்தப்படும் உச்சளவு தொகை
2022.01.05	ரூபா. 123.62	ரூபா 21.00
2022.03.15	ரூபா 140.56	ரூபா 23.00
2022.04.19	ரூபா. 175.36	ரூபா 29.00
2022.05.24	ரூபா 209.54	ரூபா 35.00
2022.07.01	ரூபா 276.79	ரூபா 46.00
2022.07.18	ரூபா 270.63	ரூபா 45.00
2022.08.05	ரூபா 267.55	ரூபா 45.00

அதன் பிரகாரம், 1 கி.மீற்றருக்கு 19/- ரூபா உதவித்தொகை செலுத்துவதற்கே 34.53 மி. ரூபா இச்செயற்றிட்டத்திற்காக ஒதுக்கப்பட்டதுடன், மேற்படி உள்ளவாறு 2022.04.19ஆந் திகதி 1 கி.மீற்றருக்கு ஆகுசெலவின் பிரகாரம் 1 கி.மீற்றருக்கு 29/- ரூபா வீதம் கொடுப்பனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டமையால் 2022ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதாக இருக்கவில்லை.

இவ்விடயங்களைக் கவனத்திற் கொண்டதன் பின்னர், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையினால் நிசி செரிய செயற்றிட்டத்தின் கீழ் எவ்விதத்திலும் புதிய சேவைகளை ஆரம்பிப்பபதைத் தற்காலிகமாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சேவைகளை இதுவரையில் செய்யப்பட்ட கொடுப்பனவு வழிமுறைகளின் கீழ் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுமாறும் 2022.05.05ஆந் திகதி நடைபெற்ற ஆணைக்குழு கூட்டத்தில் இல 59/2022 கொண்ட பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் அனுமதி பெற்றுக் கொடுக்கப்பட்டது.

அதனால், 2022.05.05ஆந் திகதியாகையில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்ட புதிய சேவைகளுக்கு நிசி செரிய செயற்றிட்டத்தின் கீழ் ஒப்பந்தம் செய்தல் இடைநிறுத்தப்பட்டது.

(ஈ) மேற்படி கணக்காய்வு விசாரணையில் குறிப்பிட்டுள்ள '14 பயணவழி கேள்வி மற்றும் சேவைத் தர ஆய்வுகளுக்காக 5,000,000 ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டினுள் 17 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன' என்பது '17 பயணிகள் கேள்வி மற்றும் சேவைத் தர ஆய்வுகளுக்காக 5,000,000 ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டினுள் 14 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன' என சரிசெய்யப்படுதல் வேண்டும் என்பதை தயவுடன் அறிவிக்கின்றேன். (2022ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட செயற்படு திட்டம் இணைக்கப்பட்டுள்ளது - இணைப்பு இல 06)

2022ஆம் ஆண்டில் 17 ஆய்வுகள் திட்டமிடப்பட்ட போதிலும்,

- 2022ஆம் ஆண்டில் ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடி காரணமாக மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகள் தொடர்ச்சியாக இயங்காமையும்
- அதனால், திட்டமிடப்பட்டிருந்த ஆய்வுகளை மேற்கொள்வதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட துல்லியமான தரவுகளைப் பெற்றுக் கொள்ள முடியாமையும் அத்தரவுகளின் அடிப்படையில் சரியான தீர்மானங்களை எடுக்க முடியாமையும் காரணமாக திட்டமிடப்பட்ட எல்லா ஆய்வுகளையும் மேற்கொள்ளவில்லை.

எனினும், எரிபொருள் நெருக்கடியிலும் பயணிகளுக்கு இடைஞ்சலின்றி உச்ச மட்டத்தில் மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துச் சேவைகளை மேற்கொள்வதற்குத் தேவையான தீர்மானங்களை எடுப்பதற்கு மாத்திரம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், 2022.08.08 ஆந் திகதிய இல 04/2022 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கைகளின் பிரகாரம் செயற்றிட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியைச் செலவுசெய்தலை மட்டுப்படுத்தல் மேற்கொள்ள்ப்பட்டமையால் அத்தியாவசிய ஆய்வுகளை மாத்திரம் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டமையால் 2022.12.31ஆந் திகதியாகையில் 14 ஆய்வுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டன.

மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் இவ் ஆய்வுகளை மேற்கொள்ளும் போது பணத்தை குறைந்தபட்ச அளவில் பயன்படுத்தும் வகையில்,

- சாதாரண கடமை விவகாரங்களுக்கு தடைகள் ஏற்படாதவாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களையே ஈடுபடுத்தி ஆய்வுத் தரவுகளை சேகரித்தலை மேற்கொள்ளுதல் (பல்கலைக்கழக மாணவர்களிற்குப் பதிலாக)
- ஆய்வுத் தரவுகளை சேகரித்தல் நிகழ்நிலை முறை ஊடாக மேற்கொள்ளுதல்

ஆகிய முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஒதுக்கப்பட்ட தொகை குறைந்தபட்ச அளவில் பயன்படுத்தப்பட்டது என்பதைத் தயவுடன் அறிவிக்கின்றேன்.

2022ஆம் ஆண்டில் பயணவழி கேள்வி மற்றும் சேவைத் தர ஆய்வு செயற்றிட்டத்திற்காக 5.0 மி.ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதில் 2,568,180.00 ரூபா செலவிடப்பட்டு 14 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

2022ஆம் ஆண்டில் பேருந்துத் தரிப்பிடங்களில் இயக்கம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கை செயற்றிட்டத்திற்காக 5.70 மி. ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அத்தொகையில் 2,621,665.00 ரூபா அச்செயற்றிட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், இக்கணக்காய்வு விசாரணையில் குறிப்பிட்டுள்ளவாறு இலக்கிடப்பட்ட விடயங்களைத் தவிர பேருந்தத் தரிப்பிடங்களின் இயக்கம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கான 2,621,665.00 ரூபா பயணவழி கேள்வி மற்றும் சேவைத் தர ஆய்வு செயற்றிட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து செலவு செய்யப்படாததுடன், இந்நிதி பேருந்துத் தரிப்பிடங்களில் இயக்கம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கை செயற்றிட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த 5.70 மி. ரூபா நிதியிலிருந்தே செலவிடப்பட்டிருந்தது.

(உ) 57- 4195இலக்கத்தைக் கொண்ட வேன் வண்டி 1995ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், கடைசியாக 2018, 2019, 2020, 2021 ஆம் ஆண்டுகளில் இயக்கத்தினைப் பேணுவதற்கு அத்தியாவசியமான பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் 2022ஆம் ஆண்டினுள் இவ்வாகனத்தின் பழுதுபார்த்தலிற்காக எவ்விதச் செலவும் மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாகம் 2021 மே மாதம் வரை தேசிய பொக்குவரத்து ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்காகச் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டது. 2021 மே மாதம் முதல் அதிக புகை வெளியேறியமையால் இயந்திரத் தொகுதியில் ஏற்பட்ட கோளாறு தொடர்பில் பழுதுபார்ப்பு அவசியமாக இருந்தபோதிலும் நிறுவனத்தில் மற்றும் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக மற்றும் அரசாங்கச் செலவீனங்களைக் கட்டுப்படுத்தல் தொடர்பில் வெளியிடப்பட்டிருந்த சுற்றறிக்கைகளின் பிரகாரம் அப்பழுதுபார்ப்பு மேற்கொள்ளப்படவில்லை.

இது வரையில் இவ்வாகனத்தைக் கொள்வனவு செய்து 25 வருடங்களிற்கு மேலாகின்றதுடன், இவ்வாகனத்தில் ஏற்படும் கோளாறுகள் காரணமாக மென்மேலும் பழுதுபார்ப்பதற்காக நிறுவனம் செலவுகளை மேற்கொள்வதா அல்லது வேறு மாற்றீடொன்றிற்குச் செல்வது பொருத்தமானதா

என்பதைத் தீர்மானிப்பற்கு நிபுணர்கள் கமிட்டி மூலம் பரிந்துரையொன்றினைப் பெற்றுக்கொள்வதற்கும் அதன்படி நடவடிக்கை எடுப்பதற்கும் ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தயவுடன் அறிவிக்கின்றேன்.

சஷி வெல்கம

தலைவர்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

අමුණුම 01

ප්‍රවාහන හා මහාමාර්ග අමාත්‍යාංශය
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
MINISTRY OF TRANSPORT AND HIGHWAYS

මගේ අංකය
எனது இல.
My No. NTC MT/02/01/01/24

ඔබේ අංකය
உமது இல.
Your No. NTC/F/

දිනය
திகதி
Date 2022.08.17

Department of Finance & Planning 01 AUG 2022

CHAIRMAN'S OFFICE 23 AUG 2022 No. 1788

සභාපති
ජාතික ගමනා ගමන කොමිෂන් සභාව

ප්‍රවාහන ක්ෂේත්‍රයේ අභිවෘද්ධිය වෙනුවෙන් කෙටිකාලීන ක්‍රියාමාර්ග සඳහා වන වැඩමුළුව - 2002.06.04

උක්ත කරුණට අදාලව ඔබ විසින් මා වෙත එවන ලද ... අංකය හා 2022.07.29 දිනැති ලිපිය හා බැඳේ.2021 වර්ෂයේ ඔබ ආයතනයේ වියදම් පිළිබඳව විගණකාධිපති වාර්තාව හා 2003.06.02 දිනැති රාජ්‍ය ව්‍යාපාර වක්‍රලේඛය මැනවින් අධ්‍යයනය කරන ලෙස කාරුණිකව දන්වමි.ඒ අනුව පොදු මගී බස්රථ සේවාවද ඇතුලත්ව ප්‍රවාහන ක්ෂේත්‍රයේ අභිවෘද්ධිය වෙනුවෙන් රු.198,250.00 ක මූදල ජාතික ගමනා ගමන කොමිෂන් සභාව විසින් දැරීමට කිසිදු බාධාවක් නැති බව නැවත දන්වමි.

02.ඒ අනුව ප්‍රධාන ගණුන් දීමේ නිළධාරි වගයෙන් අමාත්‍යාංශ ලේකම්තුමා ලබාදී ඇති අනුමැතිය අනුව ක්‍රියා කරන ලෙස නැවත දන්වමි.

බර්නාඩ් වසන්ත
අතිරේක ලේකම් (සංවර්ධන)
ප්‍රවාහන හා මහාමාර්ග අමාත්‍යාංශ
ලේකම් වෙනුවට

ඇමුණුම 02
PAGE 01

SECRETARY OF AVIATION

A.L. Ms. Sucilla

ප්‍රවාහන අමාත්‍යාංශය
போக்குவரத்து அமைச்சு
MINISTRY OF TRANSPORT

07 වෙනි මහල, සෙත්සිරිපාය අදියර II, බත්තරමුල්ල
07 ஆவதுமாடி, சேத்சிரிபாய, II ஆம்கட்டம், பத்தரமுல்லை
7th Floor, Sethsiripaya Stage II, Battaramulla

වෙබ් අඩවිය
இணையத்தளம்
Website
www.transport.gov.lk

රාජ තොලෙෆෝන් Telephone

ඇමති මහතා அமைச்சர் Minister	2187225	ලේකම් செயலாளர் Secretary	2187233	කාර්යාලය அலுவலகம் Office	2187200 2187201	ෆැක්ස් தொலைநகல் Fax	2865093 2187226	විද්‍යුත් තැපෑල් மின்னஞ்சல் E-Mail	secmintransport@gmail.com

මගේ අංකය எனது இல My No	MT/01/12/17	ඔබේ අංකය உமது இல Your No	NTC/AD/MOT/ 2020/01	දිනය திகதி Date	2022.01.20

සභාපති
ජාතික ගමනාගමන කොමිෂන් සභාව

ආරක්ෂක නිලධාරියෙකු සේවයේ යෙදවීම.

උක්ත කරුණ සම්බන්ධයෙන් ඔබගේ සමාංක හා 2021/12/01 දිනැති ලිපිය හා බැඳේ.

02.ඒ අනුව ගරු අමාත්‍යතුමියගේ ඉල්ලීම මත ගරු අමාත්‍යතුමියගේ ජාවත්තේ පිහිටි නිල නිවාසයේ ආරක්ෂාව සඳහා ඔබ ආයතනයේ ආරක්ෂක නිලධාරියෙකු සේවය යෙදවීමට 2021/08/09 දින සිට මෙයින් අනුමැතිය ලබාදෙන බව කාරුණිකව දන්වා සිටිමි.

ජී.ඒ්.ඒ.ඒ.පේ.කේ.ජයසිංහ
ජ්‍යෙෂ්ඨ සහකාර ලේකම් (පාලන)

අත්/කලේ : එන්.බී.එම්.රණතුංග
ලේකම්

(2) AD (Admn)
NAP.
28/1

(3) to the
20/01/21

Ms. Damayanthi
Pls. F.N.A.

True Copy
S. S. Aryapola
Administrative Officer
National Transport Commition

கெமி செரிய செயற்றிட்டம்

இணைப்பு 03

	பெயர்	சேவை இலக்கம்	பேருந்து இலக்கம்	இருந்து	வரை	ஒப்பந்தம் செய்யப்பட்ட திகதி	ஒப்பந்த முடிவுறும் திகதி	சேவை கிடைக்காத தூரம்	இணங்கிய தொகை
1	ஆர்.எல். சந்தமாலி விஜேரத்ன	NTC/PL/GS/NWP/2018 (iii)	60-7944	நாகசோலை	நிக்கவரட்டி	07.01.2019	06.01.2022	18	25.00
2	எச்.எம். பண்டா	NTC/PL/GS/NWP/2018 (iv)	61-1126	நிக்கவரட்டி	ரஸ்நாயக்கபுர	08.03.2019	07.03.2022	10.5	14.50
3	டப்ளியு.எம். இந்திரசேன	NTC/PL/GS/EP/2019-1	NB-8493	கெம்பலபிட்டி	பதியதலாவ	19.08.2019	18.08.2022	9.7	37.8
4	சிவரஜனி ரவிகுமார்	NTC/PL/GS/EP/2019-II	NA-2196	ஒம்னியாமடு	வாழைச்சேனை	26.08.2019	25.08.2022	9.6	37.8
5	கே.ஜீ. சுகத் சுசந்த	NTC/PL/GS/EP/2019-III	ND-8531	9 கொலனி	கிண்ணியா	27.08.2019	26.08.2022	13.3	37.75
6	ஐ.ஜீ. பிரதீப் சம்பத்	NTC/PL/GS/EP/2019-IV	NB-0450	திவுலகஸ்வெவ	கந்தளாய்	27.08.2019	26.08.2022	8.5	37.9
7	பீ. ரவிச்சந்திரன்	NTC/PL/GS/EP/2019-V	NC-8978	செங்கலடி	மியன்குளம	28.08.2019	27.08.2022	23	37.9
8	எஸ்.எம்.எம். ராபிக்	NTC/PL/GS/EP/2019-VI	JU-3329	திருமாள்புரம்	திருகோணமலை	18.09.2019	17.09.2022	5.7	37.07
9	என்.எச்.எம்.ஆர். அனோமா குமாரி	NTC/PL/GS/EP/2019-VII	HG- 5724	ஹ்ஙல்பதனாகல	தெகிஅத்தகண்டிய	24.09.2019	23.09.2022	7.4	37.75
10	கே.ஜீ. கமலானி	NTC/PL/GS/EP/2019-VIII	62-1357	முவசிறிகம	மகலுய	30.09.2019	29.09.2022	11	37.95
11	ரீ. குகநாதன்	NTC/PL/GS/EP/2019-IX	62-9238	தண்டமலை	கொக்கட்டிச்சோலை	20.12.2019	19..12.2022	16.9	37.90
12	ஜீ.பீ. அமரசேன	NTC/PL/GS/EP/2019-X	62-8564	சந்துன்புர	தெகிஅத்தகண்டிய	13.01.2020	12.01.2023	12.9	37.85

கெமி செரிய செயற்றிட்டம்

	பெயர்	சேவை இலக்கம்	பேருந்து இலக்கம்	இருந்து	வரை	ஒப்பந்தம் செய்யப்பட்ட திகதி	ஒப்பந்த முடிவுறும் திகதி	சேவை கிடைக்காத தூரம்	இணங்கிய தொகை
1	டப்ளியு.எம். இந்திரசேன	NTC/PL/GS/EP/2019-1	NB-8493	கெம்பலபிட்டி	பதியதலாவ	19.08.2019	18.08.2022	9.7	37.8
2	கே.ஜீ. சுகத் சுசந்த	NTC/PL/GS/EP/2019-III	ND-8531	9 கொலனி	கிண்ணியா	27.08.2019	26.08.2022	13.3	37.75
3	ஐ.ஜீ. பிரதீப் சம்பத்	NTC/PL/GS/EP/2019-IV	NB-0450	திவுலகஸ்வெவ	கந்தளாய்	27.08.2019	26.08.2022	8.5	37.9
4	பீ. ரவிச்சந்திரன்	NTC/PL/GS/EP/2019-V	NC-8978	செங்கலடி	மியன்குளம	28.08.2019	27.08.2022	23	37.9
5	எஸ்.எம்.எம். ராபிக்	NTC/PL/GS/EP/2019-VI	JU-3329	திருமாள்புரம்	திருகோணமலை	18.09.2019	17.09.2022	5.7	37.07
6	என்.எச்.எம்.ஆர். அனோமா குமாரி	NTC/PL/GS/EP/2019-VII	HG- 5724	ஹ்ஙல்பதனாகல	தெகிஅத்தகண்டிய	24.09.2019	23.09.2022	7.4	37.75
7	கே.ஜீ. கமலானி	NTC/PL/GS/EP/2019-VIII	62-1357	முவசிறிகம	மகலுய	30.09.2019	29.09.2022	11	37.95
8	ரீ. குகநாதன்	NTC/PL/GS/EP/2019-IX	62-9238	தண்டமலை	கொக்கட்டிச்சோலை	20.12.2019	19..12.2022	16.9	37.90
9	ஜீ.பீ. அமரசேன	NTC/PL/GS/EP/2019-X	62-8564	சந்துன்புர	தெகிஅத்தகண்டிய	13.01.2020	12.01.2023	12.9	37.85

தொடரிலக்கம்	மாகாணம்	பயணவழி	பயணவழியின் முழுத்தூரம் கி.மீ	சேவை கிடைக்காத தூரம் கி.மீ
01	கிழக்கு	கொக்கட்டிச்சோலை – பன்சேனை	18.3	14.7
02	கிழக்கு	கிரான் - முருதானை	16.4	3.8
03	ஊவா	மீதெனிய – வெல்லவாய	15.3	6.2
04	ஊவா	மீகஹபிட்டி - மொணறாகலை	32.3	13.3
05	தென்	ஊருபொக்க– கெக்குன்தெனிய – கெட்டவல – தலவத்த - மகதொல	-	9.5

	ஒப்பந்தம் செய்யப்பட்ட திகதி	டிப்போ	சேவை இலக்கம்	சேவை
1	2022.02.02	மகியங்கனை	NS/2022/UVA/MY/105	மகியங்கனையில் இருந்து கெசெல்பொத்த
2			NS/2022/UVA/MY/105-1	கெசெல்பொத்தவில் இருந்து மகியங்கனை
3			NS/2022/UVA/MY/106	மகியங்கனையில் இருந்து திவுலபெலஸ்ஸ
4			NS/2022/UVA/MY/106-1	திவுலபெலஸ்ஸவில் இருந்து மகியங்கனை
5	2023.03.08	பலாங்கொடை	NS/2022/SAB/BG/107	பலாங்கொடையில் இருந்து ஊவெல்ல
6			NS/2022/SAB/BG/107-1	ஊவெல்லவில் இருந்து பலாங்கொடை
7			NS/2022/SAB/BG/108	பலாங்கொடையில் இருந்து மாரதென்ன
8			NS/2022/SAB/BG/108-1	மாரதென்னவில் இருந்து பலாங்கொடை
9			NS/2022/SAB/BG/109	பலாங்கொடையில் இருந்து பம்பஹின்ன
10			NS/2022/SAB/BG/109-1	பம்பஹின்னவில் இருந்து பலாங்கொடை
11	2023.03.09	காலி	NS/2022/S/GL/110	காலியில் இருந்து யக்கலமுல்ல
12			NS/2022/S/GL/110-1	யக்கலமுல்லவில் இருந்து காலி
13		கெப்பெட்டிபொல	NS/2022/UVA/KPP/111	வெலிமடையில் இருந்து உடபேருவ
14	2023.03.24	நிட்டம்புவை	NS/2022/W/NT/112	நிட்டம்புவையில் இருந்து கிரிந்திவெல
15			NS/2022/W/NT/112-1	கிரிந்திவெலையில் இருந்து நிட்டம்புவை
16	2023.03.25	ஹோமாகமை	NS/2022/W/HG/113	பாதுக்கவில் இருந்து பனங்கல
17			NS/2022/W/HG/113-1	பனங்கலவில் இருந்து பாதுக்க
18			NS/2022/W/HG/114	பாதுக்கவில் இருந்து வக
19			NS/2022/W/HG/114-1	வகவில் இருந்து பாதுக்க
20	2023.04.25	சிலாபம்	NS/2022/NW/CH/108	குருணாகலையில் இருந்து ஹெட்டிபொல
21			NS/2022/NW/CH/108-1	ஹெட்டிபொலவில் இருந்து குருணாகலை
22	2023.04.29	தங்காலை	NS/2022/S/TG/116	தங்காலையில் இருந்து வலஸ்முல்லை
23			NS/2022/S/TG/116-1	வலஸ்முல்லையில் இருந்து தங்காலை
24			RBC/NS/12	தங்காலையில் இருந்து கிரிந்த
25			RBC/NS/10	கிரிந்தவில் இருந்து தங்காலை

Objective : To fulfil customer satisfaction by providing reliable and people friendly transport service for passenger and freight

No	Project Name	Activity	Allocation 2022 (Rs. Mn)	Milestones 2022 (Rs.Mn)					Expected Output / Target	Activity Revision 2022	Revised Allocation 2022 (Rs. Mn)	Milestones 2022 (Rs.Mn)					Revised Expected Output / Target	KPI	Responsibility	Remarks (if any)
					Q1	Q2	Q3	Q4					Q1	Q2	Q3	Q4				
4	Reform of the Private Bus Industry (a)	**Operation & Maintenance of bus Terminal** 1. Mobile Service for Inspection of Bus Specifications 2. Workshop for the officials of PTAs regarding awareness of Bus specifications 3.Special Functions &New Year services, Maintenance of Resting places I BM 4.Maintanance of Matara Highway Bus stand 5.Other expences for Bus stand repaires 6.Administration Work	9.000	F(Tr) F(NTC) P	1.9 20%	6 50%	7.7 75%	9 100%	conduct 24 mobile services & 9 Work shops	**Operation & Maintenance of bus Terminal** 1. Mobile Service for Inspection of Bus Specifications 2. Workshop for the officials of PTAs regarding awareness of Bus specifications 3.Special Functions &New Year services, Maintenance of Resting places I BM 4.Maintanance of Matara Highway Bus stand 5.Other expences for Bus stand repaires 6.Administration Work	5.700	F(Tr) F(NTC) P	2.142 Act.1 - 8.3% Act.3 - 100%	3.692 Act.1, 3,4,5	5.700 Act.1,2 ,3,4,5	conduct 12 mobile services & 2 Work shops	No.of mobile servicers conducted No. of operated buses with new specipications	Director (Operation)	Contribution of SLTB and PTAs

Objective : To increase average vehicle utility for public bus services in order to fulfill passenger demand

No	Project Name	Activity	Allocation 2022 (Rs. Mn)		Milestones 2022 (Rs.Mn) Q1	Q2	Q3	Q4	Expected Output / Target	Activity Revision 2022	Revised Allocation 2022 (Rs. Mn)		Milestones 2022 (Rs.Mn) Q1	Q2	Q3	Q4	Revised Expected Output / Target	KPI	Responsibility	Remarks (if any)
5	Reform of the Private Bus Industry (b)	**Traffic Demand & Service Condition Surveys**	22.500	F(Tr)					50 surveys	**Traffic Demand & Service Condition Surveys**	5.000	F(Tr)					17 surveys	No. of surveys Conducted	Director (Planning)	
		1. Conduct Surveys for - i. Surveys for new routes (Including 'Gemi Seriya') ii. Passenger demand surveys iii. Quality Improvement surveys iv. Transport Planning surveys		F(NTC)	5.5	11	16.5	22.5		1. Conduct Surveys for - i. Passenger demand surveys iii. Transport Planning surveys		F(NTC)	0.975		2.988	5				
		2. Data Entering, Analysing and writing report		P	25%	50%	75%	100%		2. Data Entering, Analysing and writing report		P	11 surveys (22%)		8	9				
		3. Forward for dissision making								3. Forward for dissision making										
		4. Administration work								4. Administration work										
6	Quality & Fare regulation (b)	**Time Tables & Service Monitoring**	1.000	F(Tr)					Preparation of All interprovincial bus routes starting with the Western Province	**Time Tables & Service Monitoring**	0.200	F(Tr)					Revision of time tables for interprovincial routes on passenger demand	No of implemented intergrated time tables	Director (Planning)	Depend on SLTB contribution
		1. Preparation & Ammendments of bus time tables for all interprovincial routes start with the Western Province.		F(NTC)	0.25	0.5	0.75	1		1. Revision of bus time tables for interprovincial routes on passenger demand		F(NTC)	0.004		0.102	0.2				
		2. Coordination with provincial transport authorities(Mobile service meeting & monitoring activities)		P	25%	50%	75%	100%		2.Administration work		P	30%		40%	40%				
		3.Administration work																		